Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 12 சனிக்கிழமை (25.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 207

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# பாலியல் குற்றவாளிகளை விடுவிக்க விக்கி சிபார்சு

தவறான சிபார்சுக்கு கிளம்புகிறது கண்டனம்


(புதுடில்லி)

மோசடி சுவாமியார் பிரேமானந்தாவின் சகாக்களான மூவர் பாலியல் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு இந்திய புழல் சிறையில் இரட்டை ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இலங்கையர்களான மேற்படி மூவரின் விடுதலையை வற்புறுத்தி சிபார்சுக் கடிதம் ஒன்றை இந்தியப் பிரதமர் மோடிக்கு வடக்கு முதல்வர் அனுப்பி வைத்துள்ளார் என்று இந்திய செய்தி ஊடகங்கள் பரபரப்பு செய்தி வெளியிட்டுள்ளன.

சர்ச்சைக்குரிய பாலியல் வழக்குக் குற்றவாளியான சுவாமி பிரேமானந்தாவின் சகாக்கள் மூவரை புழல் சிறையிலிருந்து விடுதலை செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றார் என்று செய்தி வெளியிட்டுள்ள இந்திய ஊடகங்கள், வடக்கு முதல்வரின் கோரிக்கை குறித்து அதிர்ச்சியும் ஆச்சரியமும் வெளியிட்டிருக்கின்றன.

திருச்சியில்

19 ஆம் பக்கம் பார்க்க



# அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேறவில்லை







## கூட்டமைப்பு எம்.பி.க்கள் கண்டனம்

(கொழும்பு)

புதிய ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு வழங்கிய சிறு வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றவில்லை. இந்நிலையில் 19 ஆவது திருத்தச்சட்டம் எதிர்வரும் வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

அச்சட்டமூலத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்து மீள்பரிசீலனை செய்யவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் விநோநோகராதலிங்கம் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களுக்கான எந்தவொரு ஆரோக்கியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையிலேயே ஆட்சி மாற்றத்திற்கான குரல் வலுப்பெற்றது. அதன் பிரகாரம் தமிழ், முஸ்லிம் மக்களின் பூரண ஆதரவுடன் புதிய ஆட்சி மாற்றம்

19 ஆம் பக்கம் பார்க்க

## பரந்தனில் மீண்டும் இரசாயன தொழிற்சாலை

வடக்கில் காணப்பட்ட போர் சூழல் காரணமாக மூடப்பட்ட பரந்தன் இரசாயன தொழிற்சாலையை தற்போது மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழிற்சாலையை ஆரம்பிக்க 300 முதல் 400 மில்லியன் அமெரிக்க டொலர் விலை மனு கோரப்பட்டுள்ளது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை மூலம் நாட்டுக்கு தேவையான குளோரின் இரசாயனத்தை உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வருடாந்தம் 8 இலட்சத்து 60 ஆயிரம் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி நாட்டுக்கு மீதமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## தேசியக் கொடி விவகாரம்

# மன்னிப்புக் கோரினார் டளஸ் அழகப்பெரும

(கொழும்பு)

சிறுபான்மையினரை கோடிட்டுக் காட்டும் இரண்டு நிறங்கள் அற்ற தேசியக்கொடியை பயன்படுத்தியமைக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும மன்னிப்பு கோரியுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷ, இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டமைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது இந்தக் கொடியை அழகப்பெரும உட்பட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தநிலையில் இது வருந்தத்தக்க

19 ஆம் பக்கம் பார்க்க

# வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அவசியமில்லை

## கரைச்சி பிரதேச சபை உப தலைவர் சொல்கிறார்

(கரைச்சி)

தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எவையும் இப்போது இல்லை என கரைச்சி பிரதேச சபையின் உப தலைவர் வ.நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசியல் நோக்கு தவிர்ந்த அபிவிருத்தி இலக்குகள் பற்றிய

19 ஆம் பக்கம் பார்க்க

# ஊழலுக்கு எதிரான யுத்தம் ஓயப்போவதில்லை



(கொழும்பு)

ஊழலுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நிறுத்தத் தயாராக இல்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலா மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கையை பெற்றுக் கொண்டதன் பின்னரேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நவின் திசாநாயக்க குறித்த அறிக்கையை பிரதமரிடம் அலரி மாளிகையில் வைத்து நேற்று கையளித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒளிபரப்பும் உரிமை வழங்கப்பட்டமை உள்ளிட்ட 18 விடயங்கள், குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, உரையாற்றிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, ஊழல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை நிறுத்தப் போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊழலை அகற்றவே பதவி ஏற்றுள்ளார். நாடாளுமன்ற உறுப்

19 ஆம் பக்கம் பார்க்க

# தடையை மீறி ஆர்ப்பாட்டம் 27 பேருக்கு அழைப்பாணை

(கொழும்பு)

நீதிமன்றத் தடை உத்தரவை மீறி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 27 உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் உள்ளிட்ட 27 உறுப்பினர்களையும் எதிர்வரும் மே 8 ஆம் திகதி ஆஜராகுமாறு கொழும்பு பிரதான மாஜிஸ்திரேட் நீதவான் கிஹான் பிலபிட்டிய நேற்று உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் ஆஜராக வருகைதரும் சந்தர்ப்பத்தில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன்பாக அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக தடை உத்தரவை கருவாத்

19 ஆம் பக்கம் பார்க்க

பக். 13

கூட்டமைப்பின் குறி தவறினால்...?

# சிவகுருநாதன் வெற்றிக் கிண்ணம் ஆனந்தாக் கல்லூரி இனிங்ஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

நான்காவது ஆண்டாக நடைபெற்ற சிவகுருநாதன் வெற்றிக் கிண்ண இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணிக்கும், யாழ். இந்துக் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்று வரும் சிவகுருநாதன் வெற்றிக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆனந்தாக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஆனந்தாக் கல்லூரியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியால் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கஜானந் ஒருமுனையில் பொறுமையாக ஆடி சிறிது நம்பிக்கை அளித்தார். இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 24.5 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜானந் 30, கிரிசாந் 17 ஓட்டங்களைப் பெற்றனர. பந்து வீச்சில் சுகந்தராகுல மூன்று, கபிஸ்கா, அஞ்சுலா, சுமாசன், டிலிப், ஜெயலத் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி சுகந்த ராகுலா மற்றும் நிஹால் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. நிறைவில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 34.3 ஓவர்களை எதிர்கொண்டு நான்கு விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுகந்த ராகுலா எட்டு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 84, நிஹால் பிரான்சிஸ்கோ எட்டு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 71, குசல்கெட்டகே ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிவலக்ஷன் மூன்று, மதுஷன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

188 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி சுமசானின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இரண்டாவது இனிங்ஸிலும் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாகப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக 22.1 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரணவன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுமசான் நான்கு, சுகந்தராகுலா,, டிலிப் ஜெயலத் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 82 ஓட்டங்களால் பெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் சுமசான், சிறந்த துடுப்பாட்ட வீரராக நிஹால் பிரான்சிஸ்கோ, சிறந்த களத்தடுப்பாளராக கஜனாந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வன்னியின் பெரும் போர்

# புதுக்குடியிருப்பு மத்தி சிறப்பான ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

வன்னியின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையில் இடம்பெறும் வன்னியின் பெரும் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் கோலகலமாக ஆரம்பமானது.

ஐந்தாவது போட்டியாக நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக 49 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலக்ஷன் 56 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி முதல் நிலை வீரர்களின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக 49 ஓவர்களை எதிர்கொண்டு நான்கு விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

இப்போட்டி நிகழ்வின் புதுக்குடியிருப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆதவன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள்

இதுவரை காலமும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவ்கத்தில் இடம் பெற்று வந்த நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிறப்பு, இறப்பு விவாகப் பதிவு தொடர்பான சேவைகள் எதிர் வரும் 28ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தொடக்கம் நெடுந்தீவு பிரதேச செயகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

நாளை மறுதினம் தொடக்கம் நெடுந்தீவு பிரதேச் செயலர் பிரிவுக்குட்பட்ட பிறப்பு, இறப்பு, விவாக பதிவு தொடர்பான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவ்கத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அருகிலுள்ள பிரதேச செயலகங்களில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு தொடர்பான உறுதிப்படுத்திய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். மாவட்ட காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமான பி. பிரபாகர் அறிவித்துள்ளனர்.

## வருடாந்த மஹோற்சவம்

கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

இத்திருவிழாக்களின்படி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வேட்டைத் திருவிழாவும் இன்று காலை 9.00 மணிக்கு புதிய திருத்ேர் வெள்ளோட்ட நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (85)

# சுழிபுரம் குடாக்கனை பேச்சியம்மனில் வருடாந்த வேள்வி இடம்பெறும்

(சுழிபுரம்)

வலி. மேற்கு பிரதேச சபை 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 102 (1) இன் பிரகாரம் மிருகபலியிடுவதற்கான பூரண அங்கீகாரத்தை எமக்கு வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் சுழிபுரம் குடாக்கனை பேச்சியம்மன் ஆலய வருடாந்த வேள்வியும் மிருக பலியிடலும் பிரதேச சபை சட்டத்தின் முன்.. பிரகாரம் இடம்பெறும் என ஆலயத்தினர் அறிவித்துள்ளனர்.

இவ்வேள்வியை நடாத்துவதற்கான அனுமதியை மல்லாகம் மாவட்ட நீதிமன்றமும் வழங்கியுள்ளது.

என்வே, பிரதேச சபையின் அறிவுறுத்தல் பிரகாரம் உள்ள சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி சுகாதார நடைமுறைகளைப் பேணி மிருக பலி வேள்வி இடம்பெறும் என தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை, வலிகாமமம் தென் மேற்கு பிரதேச சபைகளின் கீழ்வரும் பிரான்பற்று புளியடி வைரவர் ஆலயம், ஆனைக்கோட்டை காத்தவராயர், நவாலி தில்லைக்காளி அம்மன் ஆலய வருடாந்த வேள்விகளும் சபை தவிசாளரின் அனுமதியின் பிரகாரம் முறையே இடம்பெறவுள்ளது.

பிரான்பற்று புளியடி வைரவர் ஆலய பிரதம குரு மேற்படி வேள்வி (மிருக பலி)யை முறையாக நடாத்துவதற்கான அனுமதிக்காக பிரதேச சபைத் தவிசாளர் சி.சி. மகேந்திரனிடம் விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேள்ள, வலி.. மேற்கில் ஏற்கனவே ஒரு ஆலயத்தில் வேள்வி (மிருக் பலி) முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (92)

# இரணைமடு கனகாம்பிகைக்கு நேற்று கொடியேற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் வெகு விமரிசையாக ஆரம்பமானது.

கனகபுரம் மக்கள் கொடியேறத் திருவிழாவின் உபயதாரர்களாக விளங்குகின்றார்கள்.

பெருந்திருவிழா பிரதமகுருவாக சிதம்பரலக்ஷமி திவாகரக் குருக்கள் மகோற்சவப் பெருவிழாவை சிறப்பாக ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றார்.

கொடியேற்ற நிகழ்வில் ஏராளமான அடியவர்கள் பக்தியுடன் பங்கேற்று இருந்தார்கள்.




வரும் 02.05.2015 சனிக்கிழமை தேரத்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும் மகோற்சவ காலத்தில் ஒவ்வொரு நாளும் மதியம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | MY STYLE |
| Am 09.55 | காலைச்செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .COM |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# மருதநகர் கிராம மக்களின் காணிப்பிரச்சினை குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பன்னங்கண்டி மருதநகர் கிராம மக்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள பன்னங்கண்டிப் பகுதியில் தனியாருக்குச் சொந்த நெல் காணிகளில் சுமார் 280 குடும்பங்களும் மருதநகர் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் சுமார் 100 குடும்பங்களும் குடியேறி கடந்த 5 ஆண்டுகளாக வீட்டுத்திட்டம் உள்ளிட்ட எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அவர்களுக்கு சொந்த காணிகள் இல்லாத நிலை ஓர் காரணமாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது.

மாகாண மேலதிக காணி ஆணையாளர் அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளர் ஆர். மகேஸ்வரன் வனவள திணைக்கள அதிகாரிகள், கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் யு.என்.எச்.சீ.ஆர் பிரதிநிதிகள், மேற்படி கிராமங்களின் கிராமஅலுவலர்கள் கிராமமட்ட அமைப்புக்கள், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

தனியார் காணிகளில் மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருபவர்களுக்கு அந்த காணிகளின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பது அல்லது மாற்று இடங்களில் குடியமர்த்துவது போன்ற விடயங்கள் பற்றியும் ஏற்கனவே மருதநகர் பகுதி மக்களை மாற்றிடத்தில் குடியமர்த்தும் பொருட்டு கோணாவில் பகுதியில் காடுகளை வெட்டியபோது வனவள திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தமையால் தற்போதுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் அருள் மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை இரவு 7 மணிக்கு கைலாசவாகனத் திருவிழாவும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

தேர், தீர்த்தம் தவிர்ந்த ஏனைய உற்சவ தினங்களில் முற்பகல் 9 மணிக்கு அபிஷேகம் முற்பகல் 10.30 ஸ்தம்ப பூசை, முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் மாலை வேளைகளில் 5 மணிக்கு அபிஷேகமும் 06.30 மணிக்கு ஸ்தம்ப பூசையும் இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும். மஹோற்சவ குருவாக சிவஸ்ரீ.இ.சுதர்சனக்குருக்கள் செயற்படுவார்.

# நேதாமோகனின் துணிச்சற்காரன் கவிதைத்தொகுப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு நேதாமோகனின் முதலாவது கவிதைத்தொகுப்பான "துணிச்சற்காரன்" என்னும் நூல் நாளை ஞாயிற்றுக்கிழமை திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் பி.ப. 03.00 மணியளவில் ஜீவநதி வெளியீடாக வெளியிடப்படவுள்ளது.

இந்நூல் வெளியீடு "ஜீவநதி" கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் புலவர் அரியநாயகம் மற்றும் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் சத்தியவரதன், யாழ்.உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி.மீரா அருள்நேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நூலின் வெளியீட்டுரையினை யாழ்.இலக்கியக்குவியத் தலைவர் வேலணையூர் தாஸ் நிகழ்த்த கவிதைத்தொகுப்பின் முதற் பிரதியினை நிஷானந்தா ஜீவலரி உரிமையாளர் ஆனந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நூலின் மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.இரகுநாதன் வழங்க, ஏற்புரையினை கவிதைத்தொகுப்பின் தொகுப்பாசிரியர் கலைவாணி மோகன்ராஜ் வழங்குவார். நன்றியுரையினை இலக்கியக்குவிய செயலாளர் ஜெ.வினோத் நிகழ்த்தவுள்ளனர்.

# "தமிழ் பசங்க" திரைப்பட வெளியீடு




(யாழ்ப்பாணம்)

எஸ்.ஆர்.பிரதீப் இன் தயாரிப்பு இயக்கத்தில் முற்று முழுதாக யாழ்ப்பாணத்து கலைஞர்களை கொண்டு யாழ்ப்பாணத்தில் உருவாகிய "தமிழ் பசங்க" முழுநீளத் திரைப்படம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் செல்லா திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

காதல், காமெடி, அக்சன் ஆகியவற்றின் கலவையாக உருவாகியுள்ள இத் திரைப்படம் ஏற்கனவே ஆனைக்கோட்டை வெஸ்லி திரையரங்கில் வெளியாகி அனேகரின் வரவேற்பை பெற்று 30 நாட்களை கடந்து ஓடியமை குறிப்பிடத்தக்கது.

# 100 நாள் நல்லாட்சி - நடந்தது என்ன?

ம.அய்யம்பிள்ளை

ஏப்ரல் 23 உடன் புதிய அரசாங்கத்தின் 100 நாள் மாதிரி ஆட்சி அல்லது கூட்டரசாங்கத்தின் ஆட்சி அல்லது நல்லாட்சி எனச் சொல்லப்பட்ட ஆட்சி நடந்திருக்கிறது.

இந்த ஆட்சியினால் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன?

யார் இந்த ஆட்சியின் மூலமாக நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள்?

இதைக்குறித்த சரியான மதிப்பீடுகள் நடந்திருக்கின்றனவா?

அப்படியானால், அந்த மதிப்பீடுகள் என்ன சொல்கின்றன?

மக்கள் இந்த ஆட்சியைக் குறித்து என்ன சொல்கிறார்கள்?

மக்களுடைய எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா?

அவர்களுடைய நம்பிக்கையை ஆட்சியாளர்கள் பாதுகாத்திருக்கிறார்களா?

தமிழ் மக்கள் உட்பட தமிழ் பேசும் மக்கள் இந்த ஆட்சியினால் அடைந்த நன்மைகள், முன்னேற்றங்கள் எல்லாம் என்ன?

இந்த மாதிரி நமக்கு முன்னே உள்ள ஆயிரக்கணக்கான கேள்விகளுக்கு யாரும் பதில் சொல்லத் தயாரில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை விமர்சித்தவர்களும் எதிர்த்தவர்களும் முன்வைத்த குற்றச்சாட்டுகள் ஏராளம்.

அதேவேளை புதிய ஆட்சியைப் பரிந்துரைத்தவர்கள் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்குப்பதிலாக புதிய ஆட்சி – நல்லாட்சி மிகச் சிறப்பாக, நம்பிக்கை அளிக்கும் விதமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா? என்றால் அது கேள்வியாகவே உள்ளது.

இதற்கு நல்ல உதாரணம், புதிய ஆட்சியை எதிர்பார்த்த போதிருந்த உற்சாகத்தின் அளவுக்கு 100 நாள் ஆட்சியின் நிறைவில் உற்சாகத்தைக் காணவில்லை.

ஜனாதிபதித்தேர்தலின் வெற்றியைக் கொண்டாடியவர்கள், புதிய ஆட்சியின் 100 நாள் நிறைவைக் கொண்டாடியிருக்க வேணும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

100 ஆவது நாள் ரணில் விக்கிரமசிங்கவின் தலையையே காணவில்லை. அவருடைய பேச்சே இல்லை.

பதிலாக இப்பொழுது முன்னாள் ஆட்சியாளர்களை – குறிப்பாக ராஜபக்ஷ சகோதரர்களை கைது செய்வதும் விசாரணை செய்வதுமே நடந்து கொண்டிருக்கிறது.

முன்னைய ஆட்சியில் தவறுகள் நடந்திருந்தால் அதைப்பற்றிய விசாரணைகளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமே.

ஆனால், அது மட்டும்தான் நல்லாட்சியின் பணி அல்ல.

அரசாங்கத்தின் பணிகள் ஏராளம் உள்ளன. மீள்குடியேற்ற அமைச்சின் பணிமனை ஒன்று வடக்கில் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. தேசிய ஒருமைப்பாடு ஏற்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. நல்லிணக்க முயற்சிகள் நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. இதுபோலப் பல விடயங்கள் வாக்களிக்கப்பட்டன.

ஆனால், இவை எதுவும் நடந்ததாக இல்லை.

"முன்னர் இருந்த ஆட்சியின்போது, மக்கள் உளவியல் ரீதியாக அழுத்தத்திலிருந்தனர். இப்பொழுது அந்த அழுத்தத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்கள். அது முக்கியமானது. குடும்ப ஆட்சியும் அதிகாரமும் நீக்கப்பட்டுள்ளது. முக்கியமான பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. தேர்தல்முறையில் மாற்றத்தைச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊழல் தடுக்கப்பட்டிருக்கிறது. ஊழல் செய்தவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள். இதெல்லாம் மாற்றங்கள்தானே' என்று சிலர் வாதிடுகிறார்கள்.

எந்த ஆட்சியிலும் நன்மைகளும் உண்டு. தீமைகளும் உண்டு. இவற்றின் விகிதத்தில் உள்ள வேறுபாடுகள்தான் ஒரு ஆட்சியை நல்லது என்றும் நல்லதல்ல என்றும் வகைப்படுத்துகின்றன.

முன்னர் இருந்த மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் அந்த மாற்றங்கள் மக்களின் மனங்களில் உள்ள எதிர்பார்ப்புகளை முழுமையான அளவில் திருப்திப்படுத்தவில்லை.

பொதுவாகவே இலங்கை போன்ற நாடுகளில் உள்ள மக்களின் மனநிலை என்பது இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சையைப்போன்றது.

இந்த மக்கள் அநேகமான சந்தர்ப்பங்களிலும் எதையும் உணர்வு நிலைப்பட்டே சிந்திக்கின்றவர்கள். அறிவுசார்ந்தோ விஞ்ஞானபூர்வமாகவோ ஆராய்ந்தறிந்து சிந்திப்பதில்லை.

இதை நுட்பமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் அரசியல்வாதிகள்.

சனங்களின் உணர்வைத் தூண்டக்கூடிய, அவர்களுடைய கவனத்தில் பரபரப்பை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை எடுத்து கையாள்வதன்மூலமாக தங்களின் இயலாமைகளையும் தவறுகளையும் மறைத்து விடலாம் என்பதும் அரசியல்வாதிகளுக்கு நன்றாகத் தெரியும்.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது அதுதான்.

நல்லாட்சியில் நிறைவேற்ற வேண்டிய அடிப்படையான பல விடயங்களுக்குப் பதிலாக ராஜபக்ஷ சகோதரர்களை விமர்சிக்கும் – அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கைகள் நடக்கின்றன. தேர்தலுக்கு முன்னரும் ராஜபக்ஷ சகோதரர்களைப் பற்றியே பேச்சிருந்தது. புதிய ஆட்சியின் 100 நாள் நிறைவிலும் அவர்களைப்பற்றியே பேச்சிருக்கிறது.

ஆனால், இதையே காட்டி நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்களைச் செய்யாமல் விடுவது தவறு.

மக்களின் கவனத்தைத் திசை திருப்பி, அவர்களை ஏமாற்றும் நடவடிக்கையை புதிய அரசாங்கம் செய்யக் கூடாது.

இப்படிச் செய்தால் இந்த அரசுக்கும் மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

விலை கொடுக்காமல் பெற இயலாத பொருள் அனுபவம். - பியேர்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 100 நாட்கள் கடந்துவிட்டன!

புதிய அரசாங்கம் தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்திருந்த 100 நாள் வேலைத்திட்டத்தின் காலக்கெடு முடிவடைந்துவிட்டது. முக்கிய விடயங்கள் நிறைவேற்றப்படாமலேயே நூறு நாள் கணக்கு முடிந்துவிட்டது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரம சிங்க ஆகியோரின் தேசிய அரசாங்கம் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் இறுதி நாள் 23 ஏப்ரல், 2015.

அந்த 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பிரதான விடயங்களான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குதல், தேர்தல் முறை மறுசீரமைப்பு ஆகியவை இந்தக் காலக்கெடு முடியும்வரை நிறைவேறவில்லை.

அந்த சட்டத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டு, நேற்று முன்தினம் நள்ளிரவோடு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய அரசாங்கத்தின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவையும், தான் தலைமையேற்றிருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினையும் ஒருசேர சமாளிக்க முடியவில்லை.

மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்திவிட்டால் மைத்திரி மூலம் நல்லாட்சியைக் கொண்டுவந்துவிட முடியும் என்று நம்பிக்கையூட்டியவர்கள் விரக்தியடைந்துள்ளதோடு நம்பிக்கையை வாங்கியவர்கள் ஏமாந்துள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க, தேர்தல் முறை மாற்றத்துக்கான 20ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றத்தை விரும்பவில்லை.

ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை தொகுதி வாரியாக கிராமங்களில் அதிக வெற்றிகளைப் பெறக்கூடிய நிலைமை இல்லை. கொழும்பு மற்றும் பெரிய நகரங்களிலேயே அதற்கு பிரதான வாக்குவங்கி இருக்கிறது.

நகரங்களிலேயே அதிகளவான வாக்குகளும் செறிந்துள்ளதால் விகிதாசார தேர்தல் முறையே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாய்ப்பானது. இதை நன்கு தெரிந்துகொண்டே ஜே.ஆர்.ஜெயவர்த்தன விகிதாசார தேர்தல் முறையைக் கொண்டுவந்தார்.

தற்போதைய இந்த விகிதாசார தேர்தல் முறையில் பல குளறுபடிகள் உள்ளதை ஒப்புக்கொள்ள வேண்டும். இதில் உள்ள விருப்புவாக்கு முறையின் காரணமாக, தேர்தல் காலத்தில் வன்முறை ஏற்படுகிறது.

வேட்பாளர்கள் ஒரு மாவட்டம் முழுவதிலும் பிரசார வேலைகளில் ஈடுபட வேண்டியதால் பிரதான கட்சிகள் மூலம் பணம் படைத்தவர்கள் மட்டுமே போட்டியிடுகிறார்கள்.

மிக முக்கியமாக, விருப்பு வாக்குகளுக்காக இருபுறத்திலும் இனவாதத்தைத் தூண்டும் ஆவேசப் பேச்சுக்கள் மூலம் வாக்குகளைக் கவரும் போக்கு அதிகரித்திருக்கிறது.

தத்தம் தொகுதியின் அபிவிருத்திக்கு தாங்கள் என்ன செய்வோம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமலே தேர்தல்களில் வென்று மக்கள் பிரதிநிதிகளாக வலம்வரலாம் என்ற சீரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் உண்மைதான். அதேசமயம் புதிய முறையின் படி தொகுதிவாரியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, அது வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் சிறுபான்மை மக்களை பாதிக்கும்.

வடக்கு, கிழக்கு, மலையகம், முஸ்லிம்கள் என ஏறத்தாழ 30 சதவீதமாக சிறுபான்மையினர் உள்ளார்கள். இந்த சதவிகிதப்படி நாடாளுமன்றில் சிறுபான்மை எம்.பிக்கள் குறைந்தது 70 பேராவது வரவேண்டும். ஆனால் எப்படிப் பார்த்தாலும் 40க்குக் குறைவானவர்களே வருகிறார்கள்.

புதிய மறுசீரமைப்பில் இந்த நிலைமையை அண்ணளவுக்காவது சரிசெய்துகொள்ள முயற்சிப்பது சிறுபான்மையினர் முன் உள்ள சவாலாகும்.

- ஆசிரியர்

# ஜனநாயகம் புறம் தள்ளப்பட்டு அரசியல் வேட்டை ஆரம்பம்

## தேசிய சுதந்திர முன்னணி கவலை

(கொழும்பு)

ஜனநாயகம் புறந்தள்ளப்பட்டு அரசியல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நாடு 100 நாட்களுக்கு ஸ்திரமற்ற நிலைமைக்குள் சென்றுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் முடிவடைவதை முன்னிட்டு நேற்று முன்தினம் அந்தக் கட்சி நடததிய செய்தியாளர் சந்திப்பில் பேசிய அதன் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் முடிவடைகிறது. 100 நாளில் நாட்டுக்கு என்ன உரித்தாகியுள்ளது.

100 நாள் ஆரம்பிக்கும் போது நாட்டின் ஸ்திரமான அரசியல் நிலைமை காணப்பட்டது. தற்போது நாடு ஸ்திரமற்ற அரசியல் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டின் பொருளாதாரமும் பாரதூரமான வகையில் சரிந்துள்ளது. சமூகத்தின் சகல துறைகளிலும் பாரிய அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் ஜனவரி 9 ஆம் திகதி ஆரம்பமாகியது.

தோல்வியடைந்த அரசியல் சக்தியை அப்பா இறந்து விட்டார் எனக் கூறி புதைக்க முயற்சித்தனர். எனினும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசியல் சக்திகள் அரசியல் வேட்டையை எதிர்த்து நிற்க முடிந்தது.

100 நாள் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு அடிபணியாமல், அதற்கு எதிராக முழு நாட்டையும் விழிப்படையச் செய்ய முடிந்தது.

அடுத்த பொதுத் தேர்தலில் மிகவும் தீர்மானகரமான வகையில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ரணில் விக்ரமசிங்கவும் இந்தத் தேர்தலில் போட்டியிட நேர்ந்துள்ளது. அடுத்த தேர்தலில் எவ்வித போட்டியும் இன்றி ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவிக்கு கொண்டு வரும் தேவையான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலைத்திட்டம் இந்த 100 நாள் திட்டத்தில் இருந்தது.

எனினும் 100 நாள் முடியும் போது ரணில் விக்ரமசிங்கவின் பிரதமர் கனவை நாட்டின் தேசப்பற்றுள்ள சக்திகள் மற்றும் தேசியவாத சக்திகளால் கலைக்க முடிந்துள்ளது.

இதனால், அடிவாங்கிய பாம்பு போல் கோபத்தில் இருக்கும் 100 நாள் அரசாங்கம் தனது அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதை மிகவும் கொடூரமான முறையில் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

எதிர்க்கட்சியை சேர்ந்த பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூக்கம் விழித்து போராட்டங்களை நடத்த நேர்ந்துள்ளது. இலஞ்ச ஆணைக்குழு வேட்டை மாளிகையாக மாறியுள்ளதன் காரணமாவே இந்தப் போராட்டத்தை நடத்த நேர்ந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நற்பெயரை கெடுக்க இந்த அரசாங்கம் முயற்சித்து வருகிறது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் நற்பெயரையும் இந்த அரசாங்கம் கெடுத்து வருகிறது. அரசியல் வேட்டையாடலே இங்கு மேற்கொள்ளப்படுகிறது. நாட்டை நேசிக்கும் மக்கள் ஒருபோதும் இதனை அங்கீகரிக்க மாட்டார்கள் என்றார்.

# ஊழல்மோசடி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் காலவரையறையின்றி நீடிப்பு

(கொழும்பு)

அரச பதவி வகிப்போர் மற்றும் அரசியல் பதவிநிலையில் இருப்போர் மேற்கொண்ட அல்லது மேற்கொள்கின்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம், கால வரையறையின்றி நீடிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பதவி வகித்த அல்லது வகித்துக் கொண்டிருக்கின்றவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் நியதிச் சட்டசபைகளில் சேவையாற்றுபவர்கள் அல்லது சேவையாற்றிக் கொண்டுள்ளவர்களின் மோசடிகள், ஊழல்கள், குற்றவியல் நம்பிக்கை மீறல்கள், சொத்துக்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்தியமை தொடர்பான முறைப்பாடுகளை மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முன்வைக்க முடியும் என அவ் ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டீ சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, சொத்துக்களை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதால் அரசாங்கத்துக்கு ஏற்படுத்தப்படும் நட்டங்கள் தொடர்பான அனைத்து முறைப்பாடுகளையும் மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்வைக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

இக்குற்றங்களைச் செய்யும் மேற்படி நபர்கள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம், இம்மாதம் 10ஆம் திகதியுடன் நிறைவு பெற்றதால், அதற்கான காலத்தை வரையறையின்றி நீடிக்க மேற்படி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்த முறைப்பாடுகளை பதிவு செய்யப்பட்ட தபாலில், ஆணைக்குழுவின் செயலாளர், 5 ஆவது தொகுதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

# இலங்கையில் அடுத்த மாதம் முதல் போலியோ தடுப்பூசி அறிமுகம்

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து போலியோ தடுப்பூசியை இலங்கையில் அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நடைமுறையிலுள்ள சொட்டு மருந்து வழங்கும் திட்டத்துடன் இணைந்ததாக புதிய தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக தேசிய தொற்று நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிஹவடன கூறியுள்ளார்.

தேசிய நோய் எதிர்ப்பு திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய நடைமுறைக்கு அமைய 4 மாத குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

போலியோ வைரஸை உலகளாவிய ரீதியில் ஒழிக்கும் வகையிலேயே புதிய திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே 65 நாடுகளில் போலியோ தடுப்பூசி பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் 1993 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போலியோ நோயாளர்கள் பதிவாகவில்லை.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளிலேயே தற்போது அதிகளவில் போலியோ நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# மகிழ்ச்சியான நாடுகளில் இலங்கை முன்னேற்றம்

உலகில் மகிழ்ச்சியான நாடுகள் வரிசையில் இலங்கை 5 இடங்களைத் தாண்டி முன்னேறியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் இயங்கும் நிரந்தர அபிவிருத்தி தீர்வு வலையமைப்பின் மூலமாக இந்த தரப்படுத்தல் தயாரிக்கப்படுவதுடன் 158 நாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


2013 ஆம் ஆண்டு 137 ஆவது இடத்தில் இருநத இலங்கை தற்போது 132 ஆவது இடத்திற்கு முனனேறியுள்ளது. தனிநபர் வருமானம், ஆயுள்காலம், சுகாதாரம், நாடுகளின் ஊழல் மோசடிகள், சமூக சுதந்திரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்த தரப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

சொக்லட் உற்பத்தியில் பிரசித்தி பெற்ற சுவிச்ஸர்லாந்து இந்த தரப்படுத்தலில் முதலிடத்தை பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தை ஐஸ்லாந்தும் மூன்றாம் இடத்தை டென்மார்க்கும், நான்காம் இடத்தை நோர்வேயும் 5 ஆம் இடத்தை கனடாவும் பிடித்துள்ளன.

இலங்கையின் அயல் நாடான இந்தியா 117 ஆவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா 15 ஆவது இடத்திலும் பிரித்தானியா 21 ஆவது இடத்திலும் உள்ளன. மகிழ்ச்சி குறைந்த நாடுகள் வரிசையில் டோகோ, புருண்டி, சிரியா, பேனின், ருவாண்டா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

# உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் செய்மதியும் பயன்களும்

**செய்மதி தொழில் நுட்பத்தினால் பல்வேறுபட்ட துறைகள் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன. விவசாயம், நீர்வளம், வானிலை, காலநிலை; காடுகள், பொறியியல் துறை, அனர்த்த இடர் பகுதி கண்காணிப்பு, படவரைகலை போன்றவற்றில் செய்மதி தொழில் நுட்பத்தால் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.**



21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனம் தொழில் நுட்பங்களின் செயற்பாடுகளோடு பின்னிப் பிணைந்தே வாழ்க்கையை நடத்துகின்றனர். அந்த வகையில் மனிதனால் கண்டறிந்துகொள்ள முடியாத, மனிதனால் சென்று பார்வையிட முடியாத, கண்காணிக்க முடியாத விடயங்களையும் எளிதாக அணுக பயன்படும் ஒரு உயரிய தொழில் நுட்பமாக செய்மதி காணப்படுகிறது. எனவே செய்மதி, அதன் பயன்பாடுகள் என்பன தொடர்பாக சிறிய அறிவை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்ப காலங்களை காட்டிலும் இன்று அதிகரித்த சனத்தொகை விளைவாக மனித தேவைகளும் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆனால், வளங்களோ பற்றாக்குறையாக காணப்படுகிறது. இதனால் இருக்கும் வளங்களை மக்களிடையே சம பங்கீடு செய்யவும் விரைவான வள மதிப்பீட்டை மேற்கொள்ளவும் அதாவது எங்கே என்ன வளம் எவ்வளவு தரத்தில் காணப்படுகின்றது என்பதனை முகாமை செய்யவும், புதிய வளங்களை கண்டறிந்து வளப்பற்றாக்குறையை நீக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மனிதனின் தேவைகள் அதிகரிக்க அவனின் அறிவு வளர்ச்சியும் புவி மேற்பரப்பு அம்சங்களைக் கண்டறிய வேண்டும் என்ற ஆவலும் மனித்னை புதிய பாதையில் சிந்திக்க தூண்டியதன் விளைவால் விமானங்கள் மூலமும் செய்மதிகள் மூலமும் சென்ற புவி மேற்பரப்பம்சங்களை படமாக்கும் உணர்திறன் வாய்ந்த கருவிகளின் கண்டுபிடிப்புக்கள் விருத்தியடைந்தன. இதனால் செய்மதி மூலம் ஓர் பரந்தளவான தகவல்களை மிக விரைவாக பெறமுடிகிறது.

செய்மதி என்பது an obiect in an orbitis called a satellite இவ் அடிப்படையில் இன்று புவி மேற்பரப்பம்சங்கள் தொடர்பான தரவுகளை மிக விரைவாக பெறக்கூடிய ஒரு சாதனமாக செய்மதி காணப்படுகின்றது. உணர்திறன் கருவியை தாங்கும் அடித்தளம் ஆகவும் உணர்திறன் கருவியின் மூலம் பெறப்படும் படங்களை அல்லது தரவுகளை உரிய நிலையங்களுக்கு அனுப்பும் கருவியாக செய்மதி காணப்படுகிறது. அதாவது உணர்கருவி எல்லாம் புவி மேற்பரப்பு கதிர்ப்பு செய்யும் அல்லது பிரதிபலிக்கும் சக்தியை அளவீடு செய்வதாக அமைகிறது.

இவ்வாறு ஒரு குறித்த நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றும் இச் சக்தியை செய்மதியில் பொருத்தப்பட்டுள்ள சக்தி மிக்க உணர்கருவிகளால் கவரப்பட்டு இவை மீளவும் அதேயளவு தகவல் பெறும் நிலையங்களுக்கு செய்மதி ஊடாக உரிய வடிவில் அனுப்பப்படுகிறது.

செய்மதி தொழில் நுட்பத்தினால் பல்வேறுபட்ட துறைகள் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன. விவசாயம், நீர்வளம், வானிலை, காலநிலை, காடுகள், பொறியியல் துறை, அனர்த்த இடர் பகுதி கண்காணிப்பு, படவரைகலை போன்றவற்றில் செய்மதி தொழில்

நுட்பத்தால் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தரைத்தோற்ற படம் வரைவதற்கு தரைத்தோற்றம் தொடர்பான தகவல்களை செய்மதி துல்லியமாக வழங்குகிறது. இதன்மூலம் தரைத்தோற்றங்களுக்கிடையிலான சிறிய வேறுபாடுகளையும் அறியலாம். மண் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளவும் செய்மதி பயன்படுகிறது. பிரதேசத்திற்கு பிரதேசம் மண்ணிலுள்ள கனிப்பொருள் சேதனப்பொருட்கள் போன்றன வேறுபட்டளவில் காணப்படுவதால் மண் ஆய்வு முக்கியமானதாகிறது.

மண்வள படமாக்கலுக்கு உயர்திறனும் பயன்பாடும் மிக்க சாதனமாக செய்மதி உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டது. நீர்வளம் தொடர்பான பிரயோகத்தினையும், செய்மதியூடாக மேற்கொள்ளலாம். புவியிலுள்ள தூய்மையான நீர் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள NASA Level I Atmosphere Archive and distribution System- My; Aqua என்ற செய்மதி அனுப்பப்பட்டது.

நிலபயன்பாடு பற்றிய தகவல்கள்ளப் பெறுவதில் செய்மதி சிறப்பான தொழில்நுட்பமாக காணப்படுகிறது. வேகமாக அதிகரித்து வரும் சனத்தொகையால் நிலம் மீதான கேள்வி அதிகரித்து வருவதுடன் இருக்கும் நிலம் மீதான அழுத்தமும் அதிகரித்து வருகிறது. எனவே, நிலப்பயன்பாட்டுத் தகவல்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள தகவல்களை பெறுவது மட்டுமன்றி, மாறுபடும் தன்மைகளை அறிந்துகொள்ளவும் செய்மதி ஆதாரமாக அமைகின்றது.

நிலப்பயன்பாடுகளை படமாக்குவதில் பாரம்பரிய முறைகள் உழியச் செறிவானதாகவும் குறுகிய காலத்தில் ஏற்படும் மாற்றங்களை புலப்படுத்தாத தன்மையிலும் காணப்பட்டன. இக்குறைபாட்டை நீக்குவதற்காக நில்ப்பயன்பாடு பற்றிய கற்கைக்கு Landsat, spot ஆகிய செய்மதிகள் பயன்படுகின்றன.

விவசாய பிரயோகத்தை நோக்கினால் பயிர்விளை பரப்பு மதிப்பீடு (Crop area estimation) பயிர் விளைவு எதிர்வு கூறல் (Crop producation fore casting). போன்ற பலவற்றிற்கு செய்மதி உதவுகிறது உதாரணமாக Distant Fields of grain (தானிய செய்கை) தொடர்பான ஆய்வுகளுக்கு Nasa Land proces Distrubited archive center- My; Tera என்ற செய்மதி மூலம் தகவல் பெறப்பட்டது.

புல் நிலம் மற்றும் காடுகள் தொடர்பான பிரயோகத்தில் காட்டுத்தீ வலயங்களை அடையாளம் காணல் கண்காணித்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. காடுகளை சிறப்பான முறையில் பராமரிக்கவும் பாதுகாக்கவும் செய்மதி பயன்படுத்தப்படுகிறது. தற்போது எவ்வளவு காடுகள் உள்ளன? எனவும் முதலிருந்த காட்டுப்பரம்பலிலிருந்து தற்போது எப்படி வேறுபட்டிருக்கிறது? காடழிப்பு கர்டாக்கம் எங்கு நடந்தது? தீப்பற்றிக் கொண்டிருக்கும் காடுகளை அறிதல் போன்றவற்றை இதனூடாக மேற்கொள்ளலாம்.

உதாரணமாக காடுகளின் எல்லைகள் பற்றி அறிவதற்கு Nasa Modaps Level I Atmosphere Archive and Distrubution System MdJ Terra என்ற செய்மதி மூலம் ஆய்வை மேற்கொண்டது.

பொறியியல் துறையில் அணைக்கட்டு இடத்தெரிவு ஆற்றிற்கு குறுக்காக பாலம் அமைப்பதற்கான இடத்தெரிவு போன்றவை இதனூடாக மேற்கொள்ளலாம். பெற்றோலியம் நிலக்கரி போன்ற வளங்கள் வரையறுக்கப்பட்டதாக காணப்படுவதால் மற்றைய வளங்கள் பற்றிய ஆய்வு முக்கியமாகிறது.

இந்நிலையில் பிறேசிலில் காற்றுச் சக்தியின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் அது தொடர்பான ஆய்வினை மேற்கொள்ள நாசாவின் Quick Scat என்ற செய்மதி ஆய்வினை மேற்கொண்டது.

புவிசரிதவியலிலும் செய்மதியின் பயன்பாடு காணப்படுகிறது. குறிப்பாக நில அதிர்வு (Seismic Hazard) புவிமேற்கு அனர்த்தம் (Geomorphic Hazard) எரிமலை (Volcanic Haxard) பனிக்கட்டி (Glaciological Hazard) போன்றவற்றின் நிலை பற்றியும் இதனூடாக அறியலாம்.

இன்று புவியின் மேற்பரப்பு செயற்பாடுகள் அசைவுகள் பற்றிய அறிவு அனைவராலும் வேண்டப்படுகிறது. அதன் மூலமே இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே உணர முடியும். புவிநடுக்கம் எரிமலை போன்றவை ஏற்கக்கூடிய இடங்களை துல்லியமாக அடையாளங்காண செய்மதி பயன்படுத்தப்படுகிறது. அவ்வகையில் புவிமேல் ஓட்டின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற நாசாவால் Gps Receivers தொழில் நுட்பங்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அகலாங்கு நெட்டாங்கு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டது் புவியின் அசைவுகள் பற்றிய அறிவும் முக்கியமாகிறது. அதற்காக் Terra செய்மதி அனுப்பப்பட்டு புவி அசைவுகள் பற்றிய தகவல் பெறப்பட்டது.


வ்ளிமண்டலவியல் வானிலை எதிர்வு கூறல் காலநிலை பற்றிய கற்கை பூகோள மாற்றம் போன்றவை தொடர்பான சிறந்த தகவல்களைப் பெற செய்மதி பயன்படுத்தப்படுகிறது. வளிமண்டல மூலகங்களான வெப்பம், அமுக்கம் காற்றின் தற்போதைய நிலைகள் பற்றியும் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் முற்கூட்டியே அறியலாம். எங்கு வெப்பம் உயரும்? எங்கே பனி உருகிக் கொண்டிருக்கிறது போன்ற தகவல்கள் அறியலாம். இந்நுட்பமானது முகில்களை ஆய்வு செய்து மழையின் அளவைவ் முற்கூட்டியே தெரிவிக்கும் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான பல தகவல்கள் இதனூடாக வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக வளிமண்டலவியல் தொடர்பான தகவலைப் பெறுவதற்கு Aqua என்ற செய்மதி ஏவப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அவுஸ்ரேலியாவிற்கு மேலாக காணப்படும் aerosols தொடர்பான தகவல்களைப் பெற Terra என்ற செய்மதி பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு செய்மதியின் பயன்பாடானது உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு துறையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து வருவதனால் இவை பற்றி அறிந்து கொள்வதும் அவசியமானதாகிறது.

# கோத்தாபயவை தண்டித்தால் தீக்குளிக்கவும் தயார்

## - பொதுபலசேனா எச்சரிக்கை



கோத்தாபய ராஜபக்ஷநாட்டை ஆட்சி செய்திருந்தால் நாடு சுத்தமாகியிருக்கும். தலைசிறந்த தலைவர் கோத்தாபய என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் கோத்தாபய ராஜபக்ஷவை தண்டித்தால் தீக்குளிக்கவும் தயாராக இருப்பதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொது பலசேனா அமைப்பினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டில் முஸ்லிம்களின் அராஜகம் தலை தூக்கிவிட்டது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ அரச ஊழியராக இருந்தாலும் அவர் பல சந்தர்ப்பங்களில் நல்ல தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டது முதற்கொண்டு நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு சென்றது வரை முழுமையான புகழும் கோத்தாபய ராஜபக்ஷவிற்கே சேரும்.

அவரின் முயற்சியே இன்று தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை அமைதியாக வாழ இடம் கொடுத்துள்ளது.

அதேபோல் ராஜபக்ஷ அரசாங்கத்தைப் போல் இந்த நாட்டில் வேறு ஒரு அரசாங்கம் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதும் இல்லை.

அதிலும் குறிப்பாக கோத்தாபய ராஜபக்ஷ என்ற நபர் சாதாரண மனிதர் இல்லை. அவர் ஒரு இரும்பு மனிதர்.

நாட்டில் முஸ்லிம்களின் கரம் ஓங்கிய போதிலும் தீவிரவாதம் பரவியபோதும் எமக்கு தீர்வினை பெற்றுக் கொடுத்தவர் கோத்தபாயவே ஆவார்.

அவரைப்போல் ஒரு தலைவர் வேறு எவரும் இல்லை. அதே போல் மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோரும் சிறந்த தலைவர்களே.

எனினும் இன்று அவர்களுக்கு எதிராகவே சூழ்ச்சிகள் பலமடைந்துவிட்டன.

ராஜபக்ஷ குடும்பத்தினை தண்டிக்க துடிக்கும் அரசாங்கம் ரிஷாத பதியுதீன், ராஜித ஆகியோரே ஏன் விட்டுவைத்துள்ளது.

மகிந்த அரசாங்கத்தில் இவர்கள் செய்த குற்றச்சாட்டுக்கள் ஏன் மறைக்கப்படுகின்றன. இவர்கள் தற்போது தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதன் காரணமே இவர்களின் தவறுகள் மூடி மறைக்கப்படுகின்றன.

கோத்தாபய ராஜபக்ஷ மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்த அவரை தண்டிக்க நினைபபதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

கோத்தாபய ராஜபக்ஷ மீது நாட்டு மக்கள் அதீத அன்பும் மரியாதையும் வைத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் அவரை தண்டிக்க நினைத்தால் மக்கள் சார்பில் பலர் தீக்குளிப்பார்கள். அதில் எமது உயிரும் உள்ளடங்கும் என்பதை அரசாங்கத்திற்கு தெரிவிக்கின்றோம் என்றார்.

# திருப்தியளிக்கின்றது 100நாள் வேலைத்திட்டம்

## - ராஜித மகிழ்ச்சி



100 நாள் வேலைத்திட்டம் தொடர்பில் திருப்தியடைய முடியும் என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்காவிலுள்ள எந்தவொரு ஜனாதிபதியும் குறுகிய காலத்திற்குள் இவ்வாறான உறுதிமொழிகளை நிறைவேற்றவில்லை என அமெரிக்காவின் ஜோன் கெரி கூறியுள்ளார். 75 முதல் 80 வீதமான உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நான் நினைக்கின்றேன். சட்டமூலங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நிவாரணங்களுக்கான நிதி வழங்கப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அனைவரது சம்பளமும் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விலை பாரியளவில் குறைவடைந்துள்ளது. பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. இந்த மாதம் பணவீக்கம் .11 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அண்மைக்காலத்தில் பணவீக்கம் தசம அளவில் குறைவடைந்துள்ளதாக நான் நினைக்கின்றேன. என்றார்.

# மீனவர்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வு

## கடற்றொழில் நீரியல்வள அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நோக்கம் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதை தடுப்பதற்கு தேவையான அனைத்து ஆலோசனைகளையும் கடற்படையினருக்கு வழங்கியுள்ளார்.



கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட தமிழக மீனவர்களின் 25 படகுகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று இலங்கை மீனவர்களும் இந்திய கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.


மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் அண்மையில் நடைபெற்ற இரு தரப்பு பேச்சுவார்த்தையின்போது வருடத்தில் 83 நாட்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்கள் அனுமதி கோரியிருந்தனர்.

எவ்வாறாயினும் இந்த அனுமதியை வழங்கப்போவதில்லை.

சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிக்கும் படகுகளை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையும் தொடரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெறுப்புணர்வு அரசியலில் ஈடுபட்டதில்லை

## - முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

எனது ஆட்சிக் காலத்தில் வெறுப்புணர்வு அரசியலில் நான் ஈடுபட்டதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல்வாதிகள் சிறைச்சாலை செல்வதை பாரதூரமான விடயமாக கருதக்கூடாது, அது அவர்களை பொறுத்தவரை சாதாரணமான அனுபவம்

நானும் மூன்று மாத சிறைத் தண்டனையை அனுபவித்து உள்ளேன்.

பௌத்த மதத்தைச்சேர்ந்தவன் என்ற வகையில் நான் வேறு எந்த மதத்திற்கு எதிராகவும் பாகுபாட்டைக் காட்டவில்லை. வெறுப்புணர்வு அரசியலிலும் நான் ஈடுபடவில்லை.

ஆனால் நல்லாட்சி அரசாங்கம் சட்டமா- அதிபரின் ஆலோசனையை பெறாமலே பசில் ராஜபக்ஷவை சிறைச்சாலைக்கு அனுப்ப முயல்கின்றது.

கடந்த 100 நாட்களில் எங்களால் குற்றச்சாட்டுகளை தவிர வேறு எதனையும் கேட்கமுடியவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் பசில் கைதுசெய்யப்பட்டார், முக்கிய அதிகாரிகள் பலர் விசாரிக்கப்பட்டனர்.

பசில் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு இலங்கை வரவிரும்புவதாக தெரிவித்தவேளை நான் அவர் கைதுசெய்யப்படலாம் என்றேன்.

அவர் தான் அப்பாவி தவறு எதனையும் செய்யவில்லை என்றார்.

பௌத்த மத ஆடைகளை வழங்குவது கூட ஒரு குற்றமாகிவிட்டது,எதிர்காலத்தில் சில் அனுஷ்டானங்களும் குற்றமாகலாம்.

இலஞ்ச ஊழல் திணைக்கள ஆணையாளருக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் உள்ளன. அவர் சட்டவிரோதமாக காணிகளை வாங்கியுள்ளார்,அவர் இரண்டு இடத்தில் ஊதியம் பெற்றுள்ளதுடன் தனது சொத்துக்களையும் பிரகடனம் செய்யவில்லை.

எனது ஆட்சிக்காலத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது பெரும் தவறு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 69 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி

கடந்த நாடாளுமன்றத் தேர்தலினூடாக முதற்தடவையாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான சகல புதிய உறுப்பினர்களும் ஓய்வூதிய கொடுப்பனவை பெறுவதற்கான தகுதியை பூர்திசெய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தொடர்ச்சியாக 5 வருட காலம நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிப்பாராயின் அவர் ஓய்வூதிய கொடுப்பனவை பெறுவதற்கான தகுதி பெற்றவராக கருதப்படுவர் இதன்படி கடந்த தேர்தலில் புதிதாக நாடாளுமன்றத்துக்கு தெரிவான 69 உறுப்பினர்கள் அதற்கான தகுதியை பெற்றுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதியுடன் தற்போதைய நாடாளுமன்றத்திற்கு 5 வருடங்கள் பூர்த்தியாகிய நிலையிலேயே அவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. 22ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அவர்க்ள் இந்த வாய்ப்பை இழந்திருப்பர். இந்நிலையில் புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்த பின்னர் நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்படக் கூடாது என வலியுறுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக்கட்சி சொந்தச்சொத்து அல்ல

## கூறுகிறார் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சி எனது சொந்த சொத்து அல்ல. கட்சி தோல்வி அடைந்த போதெல்லாம் அதனை கட்டிக்காக்க நடவடிக்கை எடுத்திருந்தேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போது அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து தீர்மானம் எடுக்கின்றோம். 100 நாள் திட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் 44 வாக்குறுதிகள் பூர்த்தியாகியுள்ளன.

52 வாக்குறுதிகள் பூர்த்தியாகும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. நான்கு வாக்குறுதிகள் மட்டும் நீண்ட கால அடிப்படையில் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளது.

2005ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ பிரபாகரனுடன் இணைந்து என்னைத் தேர்தலில் தோற்கடித்தார்.

அதன் பின்னர் குமரன் பத்மநாதனுடன் அவர் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தார் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# மகிந்த–மைத்திரி சந்திப்பு அடுத்த வாரம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இன்று கொழும்பில் நடப்பதாக இருந்த சந்திப்பு அடுத்த வாரத்திலயே இடம்பெறும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நிலவும் அரசியல் சர்ச்சைகள் குறித்து இருவரும் இன்று கொழும்பில் உள்ள பொது இடம் ஒன்றில் சந்தித்துப் பேசுவர் எனத் தெரவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெறாது என்றும் அடுத்த வாரமே இடம்பெறும் என்றும் முன்னாள் ஜனாதிபதியின் தொடர்பாளர் தெரிவித்தார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரங்குகளின் பிரச்சினைக்கு தென்மராட்சியில் தீர்வு

## யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் தகவல்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தின் உயிர்ப்பல்வகைமையை பாதுகாக கும் பொருட்டு விவசாயத்திணைக களம் வனவிலங்கு திணைக்களத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலில் (UNDP) மீசாலை பழமுதிர்சோலையினூடான" நிதி அனுசரணையின் கீழ் குரங்குகளை காட்டினுள் விடுவித்து வருவதாக யாழ்.பிரதி விவசாயப் பணிபபாளர் கி.சிறிபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இக்குரங்குகளை காட்டினுள் விடுவிக்கும் செயற்பாடு ஆரம்பிக்க முன்னர் இலங்கையின் குரங்குகளை நிபுணத்துவம் பெற்ற இராஜரட்டை பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர்.ஆர். வன்டகோன் (Primatologist) தென்மராட்சி பிரதேசத்தின் குரங்குகளின் நடத்தை பற்றிய ஆய்வினை 30.01.2015 - 02.02.2015 வரையான காலப்பகுதியில் தென்மராட்சி பிரதேசத்தில் தங்கி நின்று மேற்கொண்டார். இவரின் ஆய்வின் அடிப்படையில் தென்மராட்சி பிரதேசத்தில் 400 - 500 எண்ணிக்கை வரையான குரங்குகள் காணப்படுவ்தாக தெரிவிக் கப்பட்டது. இத்திட்டத்தினூடாக 300 வரையான குரங்குகளை அகற்றுவதற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வன விலங்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர்.தாரக பிரசாத் மற்றும் அவரது உத்தியோகத்தர்கள் 02.02.2015 - 05.02.2015 வரை தங்கி நின்று எவ்வாறு கூடுகளில் குரங்குகளைப் பிடித்தல் என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது.

மக்களின் வேண்டுகோளிற்கமைய முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் இக்கூடுகள் மக்களுக்கு வழங்கப்படுவதுடன் எவ்வாறு குரங்குகளை கூடுகளில் பிடித்தல் மற்றும் அவற்றினை கையாள்தல், பிடிபடும் குரங்குகள் தொடரபான உணவு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள்.என்பன தொடர்பான அறிவுறுத்தல்கள் மற்றும் பயிற்சிகள் விவசாயத்திணைத்தளத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது 02.02.2015 தொடக்கம் 21.04.2015 காலப்பகுதி வரை 158 குரங்குகள் விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலின் மூலம் பிரதேச மக்களால் கூடுகள் வைத்து பிடிக்கப்பட்டுள்ளன. இக் குரங்குள் விவாயத்திணைகள பாரவூர்தியில் வனவிலங்கு திணைக்களத்தின் பாதுகாப்பு வழித்துணையுடன் விடியற்காலை 03.30 மணியளவில் மக்களின் பாரிய ஒத்துழைப்புடன் தென்மராட்சியிலிருந்து வனத்திற்கு எடுதது்ச் செல்லப்படுகின்றது. இவ்வாறு பிடிக்கப்பட்ட குரங்குகளிற்கு ஒரு குரங்கிற்கு ரூபா 1000 வீதம் திட்டத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் கூடுகளை தமது பிரதேசத்திற்கு எடுத்துச் செல்லல், உணவுகள் வைத்து குரங்குகளைப் பிடித்தல் மற்றும் விவசாயத் திணைக் களத்திடம் பிடிபட்ட குரங்குகளை கையளிக்கும் வரை அவற்றின் உணவு மற்றும் பாதுகாப்பு என்பன மக்களின் பங்களிப்பாகவே காணப் படுகின்றது.

இத்திட்டத்திற்கு விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் திட்ட இணைப்பாளராக கடமையாற்றி வருகின்றார். 15 - 20 குரங்குகள் பிடிபட்டவுடன் திட்ட இணைப்பாளருடன் தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் அவற்றினை வனவிலங்கு திணைக் களத்திடம் கையளிப்பதற்காக சகல ஏற்பாடுகளும் முன்னெடுக் கப்படும்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 50 வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப் பட்டதுடன் அவர்களது வீட்டுத் தோட்ட உற்பத்தி விளைச்சலும் பதியப்பட்ட வண்ணம் உள்ளன. இவர்களின் ஆர்வத்திற்கமைய மேலதிக உள்ளீடுகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

வீட்டுத் தோட்டத்தின் உயிர்ப் பல்வகைமை விரிவுபடுத்தல் மற்றும் அதன் தாக்கத்தின் பரிமாணம் தொடர்பான செயற்பாடுகளை விஞ்ஞான பூர்வமாக ஆவணப்படுத்துவ தற்காக விவசாய திணைக்கள உத்தியோகத்தரால் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

# "பனுவல்" நூல் வெளியீடு

(வலிகாமம்)

வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் பனுவல் எனத் தலைபபிடப்பட்ட பிரதேச நூல் வலி மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் வட மகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சர் குருகுலராஜா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்துக் கொண் டார். இந நிகழவில் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி, ஐங்கரன் கல்வி அமைச்சரின் பிரதேச வருகையின் பொருட்டு சம்பிரதாய பூர்வமாக நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டார். (25)

# அபிவிருத்தி உத யாளர் ஒன்றிய புதிய நிர் ாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி உதவியாளர்களின் ஒன்றியத்துக் கான 15 பேர் கொண்ட புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது.

இந் நிர்வாகத் தெரிவின்போது தலைவராக வி.கமலதாசன், உபதலைவராக எஸ்.சத்தியசீலன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

மேலும் செயலாளராக சி.விக்ரர் தயாநிதி, உபசெயலாளராக எஸ்.சிவச்செல்வம் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இணைப் பாளராக எஸ்.கஜன், ஊடக இணைப்பாளராக எஸ்.ஐங்கரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் நிர்வாக உறுப்பினரர்களாக எஸ்.மதீஸ்வரன், எஸ்.சிவகுமார், ரி.மங்களேஸ்வரன், ரி.உதயமலர், எம்.சிவகுமாரன், கே.சசிகரன், ரி.கேசவன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)



கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் சாம ஸ்ரீ பாராட்டு விழாவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் வி.பி.சுந்தரராஜன், யாழ்.கொட்டடி கலாநிதி தனேந்திரன், கோப்பாயைச் சேர்ந்த தொழில் அதிபர் க.பரமானந்தராசா ஆகியோருக்கு 'தேசமான்ய' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (105)

# ஏற்றுநீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்

## துணுக்காய் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் மூலம் கிராமத்திற்கான ஏற்றுநீர்ப்பாசனத் திட்டமொன்றினை நடைமுறைப் படுத்துமாறு கிராம மக்கள் துணுக்காய் பிரதேச செயலர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் 115 வரையான குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். இக்கிராமத்தின் உயிர்நாடியான அம்பலப்பெருமாள் குளத்திலிருந்து ஏற்றுநீர்ப்பாசனத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மேட்டுப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளமுடியுமெனவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

# விசேட சிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

மூளைமுடக்குவாத நோயாளர்களுக்கான விசேட சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளது. செரிபரல் பால்சி லங்கா பௌண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நோயா ளர்களுக்கான விசேட சிகிச்சை முகாமின் முதலாம் கட்டம் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நடமாட உதவும் உற்பத்திப் பிரிவு வளாகத்தில் நடைபெற்றது.

மேற்படி மருத்துவ முகாமில் கலந்துகொள்ளத் தவறியவர்களுக்காக எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரையும் இடம்பெறவுள்ள நோயாளர்களுக்கான 2 ஆம் கட்ட மருத்துவ முகாமில் தவறாது பங்குகொண்டு விசேட சிகிச்சையையும் சக்கர நாற்காலியையும் பெற்றுக்கொள்ளுமாறு முதலாவது சிகிச்சை முகாமில் பங்கு கொண்டவர்கள் தேவையேற்படின் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறும் சிகிச்சை முகாமில் கலந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் குறித்த நோயாளர்களும் அவர்களது பாதுகாவலர்களுக்கும் யாழ.ஜெய்ப்பூர் கிளையின் பொருளாளரும் பதில் தலைவருமான வைத்திய கலாநிதி திருமதி.செ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

விளைவேலி தாளையம்பதி அருள்மிகு துர்க்காதேவி- தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளது. பாலஸ்தாபன கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை சூரிய உதயத்தில் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகின்றது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை வாஸ்து சாந்தி, கடஸ் தாபனம், கலாகர்ஷணம், யாகபூசை இடம்பெற்று புதன்கிழமை முற்பகல் 11.11 மணி முதல் 12 மணி வரையுள்ள கடகலக்னத்தில் பாலஸ்தாபன மஹாகும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளதுடன். விசேட பூசைகள் தீபாராதனைகள் இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா ம.பரமேஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (இ)

# இயக்குநர் சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கூட்டுறவு அபிவிருந்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசு தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தின்போது புதிய இயக்குநர் சபை உறுப் பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இத் தெரிவின் பிரகாரம் தலைவராக அ.குகதாசனும், உப தலைவராக சி.இராசநாயகமும் தெரிவு செய்யப்பட்டதோடு இயக்குநர் சபை உறுப் பினர்களாக சி.மகேந்திரம், மா.பரமானந்தம், சோ.இராகவானந்தம், ப.சபேசன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(25.04.2015 சனிக்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 12 ஆம் திகதி.
சப்தமி - திதி. மரணயோகம்.
புனர்பூச நட்சத்திரம் மாலை 05.13 வரை. பின் பூசம்.
இராகுகாலம் 09.00-11.30 வரை சுபநேரம் 03.00-04.30 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** – நீண்ட நாட்கனவு நிஜமாதலினால் மகிழ்வேற்படல்.

**ரிஷபம்** – சினத்தை அடக்கியதால் வரவிருந்த துயர் விலகிவிடல்.

**மிதுனம்** – விட்டுக் கொடுப்பினால் சுமுக நிலை ஏற்படல்.

**கடகம்** – ஏகாந்தத்தைக் ஙகவிட்டு நண்பர்களுடன் சகஜநிலை தக்க வைத்தல்.

**சிம்மம்** – உதவப்போய் வீண் சிக்கலில் மாட்டுப்பட்டு வேதனை தக்க் வைத்தல்.

**கன்னி** – எரிபொருள் நிரப்பும் மீற்றரில் அவதானிப்பைக் கைவிடா திருத்தல்.

**துலாம்** – விசாரணை பாதகமாக இருப்பதினால் முயற்சியைக் கைவிடல்.

**விருச்சிகம்** – காணாமற போனவர் பற்றிய தகவல்கிட்டியதால்ஆனந்தமடைதல்.

**தனுசு** – கௌரவப்பதவிக்கு பிரமுகர் சிபார்சு செய்தல்.

**மகரம்** – முயற்சிக்கு தக்க பலன் கிடைத்துவிட்டதால் ஆனந்த மயமாதல்.

**கும்பம்** – முதலீட்டுக்குத்தக்க இலாபம் கிடைக்காமையினால் கவலையுறல்.

**மீனம்** – இன்ப சுகம் அனுபவிக்க விடாது நோய் காரணமாக அமைதல்.

# ஆவரங்கால் மத்தி இந்து இளைஞர் இறுதிச் சுற்றுக்குத் தகுதி



கைதடி நவபுரம் நவசக்தி சனசமூக நிலையத்தில் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால இந்து இளைஞர் அணியும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக கழக அணியும் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நவசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவது அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணியும் மோதின முதலாவது செட் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:18 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற 2 ஆவது செட் ஆட்டத்தில் வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் களமிறங்கிய நாயன்மார்கட்டு பாரதி அணி ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு நிகராக கோல்கள் எதையும் போடமுடியவில்லை.

2 ஆவது செட்டிலும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியே 25:17 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. விறுவிறுப்புடன் நடைபெற்ற 3 ஆவது செட் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர அணி 25:16 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணியும மோதின.

இதில் 1 ஆவது செட்டை புத்தூர் கலைமதி அணி 25:20 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

2 ஆவது செட்டை வெற்றி பெற வேண்டும்என்ற இலக்குடன களமிறங்கிய ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி 25:20 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

3 ஆவது செட் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி 25:20 என முன்நிலை வகித்தது. மிக விறுவிறுப்புடன் நடைபெற்ற 4 ஆவது செட் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 25:19 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

நடைபெற்று முடிந்த 4 செட் போட்டிகளிலும் இரு அணிகளும் இரு செட்களில் வெற்றி பெற்று சமநிலையில் இருந்தன. வெற்றியைத் தீர்மா னிக்க 5 ஆவது செட் ஆட்டம் ஆரம்பமானது.

இரு அணி வீரர்களுமே முனைப்புடன் செயற்பட்ட போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி 15:11 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை கைதடி நவபுரம் நவசக்தி சனசமூக நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# காலபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் மேற்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சென்.மைக்கல் விளை யாட்டுக்கழக அணியும் றெட் றேஞ்சர் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.



மற் றொரு போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியும் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியும் மோதவுள்ளன. (93)

## கால்பந்தாட்டப் போட்டி

## யங்ஹென்றிஸ், சென்லூட்ஸ் வெற்றி

அண்ணா விளையாட்டுக் கழக அணி, வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்திவரும் கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியும் சென்லூட்ஸ் அணியும் வெற்றி பெற்றன.

இப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியும் மானிப்பாய் சில்வெஸ்ரார் அணியும் மோதின. இளவாலை யங்ஹென்றிஸ் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் தெல்லிப்பளை நாகம்மாள் அணியும் சென்லூட்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்ததால் தண்ட உதை மூலம் வெற்றியைத் தீர்மானிப்பது என முடிவுசெய்யப்பட்டது.

தண்ட உதையில் சென்லூட்ஸ் அணி 7:6 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# கால்பந்தாட்டத்தில் அசத்தும் மகாஜனா மாணவிகள்

நேபாளத்தில் திங்கள் ஆரம்பமான ஆசிய கால்பந்தாட்ட கூட்டுச்சம் மேளனத்தின் 14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான பிராந்திய கால்பந்தாட்ட போட்டியில் மாலை தீவுகள் அணியை இலங்கை அணி 6:0 என்ற கோல்கள் கணக்கில் துவம்சம் செய்துள்ளது.

இப் போட்டி யில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த சுரேந்திரன் கௌரி (4ஆவது நிமிடம்), சிவனேஸ்வரன் தர்மிகா (70ஆவது நிமிடம்) ஆகியோர் கோல்களைக் போட்டமை குறிப்பிடத்தக்கது.

14 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணிக்கு அணியின் உதவி தலைவியாக கௌரி விளையாடுகின்றமை விசேட அம்சமாகும்.

யாழ்.பாடசாலை மாணவி ஒருவர் உத்வி அணித்தலைவியாக விளையாடுவது இதுவே முதல் தடவையாகும். இவர் கடந்த வருடமும் இலங்கை அணியில் இடம்பெற்றவராவார். (48)





# யாழ்.பல்கலையில் மேசைப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைப்பந்தாட்ட அணிகளும் இணைந்து கழகங்களுக்கிடையிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான சுற்றுப் போட்டி இன்றும் பெண்களுக்கான சுற்றுப் போட்டி நாளையும் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் 8 அணிகளும் ஆண்கள் பிரிவில் 8 அணிகளும் பங்கு கொள்ளவுள்ளன.

இப்போட்டியில் பங்கு கொள்ள குறிப்பிட்ட சில கழக அணிகள் மாத்திரமே அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சிவா விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு பெறும் அணிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் அணியில் 6 பேர் கொண்ட போட்டியாகவும் 4 பேர் கொண்ட போட்டியாகவும் நடைபெறும். பங்குபெற விரும்பும் அணிகள் அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேற்படி விளையாட்டுக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சிவா விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெறவுள்ளன.

விண்ணப்பிக்கும் அணிகளுக்கு போட்டி பற்றிய விபரம் அறிவிக்கப்படும் என போர்ட்டி அமைப்பாளர் தெரிவிக்கின்றனர்.

# சுப்பர் கிங்ஸின் பெறுமதி வெறும் 5 இலட்சமாம்

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மதிப்பு 5 இலட்சம் ரூபா என கணக்கு காட்டப்பட்டுள்ளது புதிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.


இது குறித்து அமுலாக்க துறை விசாரிக்க உள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளர் சீனிவாசன், சென்னை சூப்பர் கிங்ஸ் லிமிடெட் என்ற தனிநிறுவனத்தை உருவாக்கி, அந்நிறுவனத்துக்கு சிஎஸ்கே அணியை விற்றார். இந்திய கிரிக்கெட் சபையின் விதி முறைப்படி, ஒரு ஐபிஎல் அணியை விற்கும் போது, அதன் மொத்த விலையில் 5 சதவீதத்தை பி.சி.சி.ஐக்கு கட்டணமாக செலுத்த வேண்டும். இந்த கட்டணத் தொகையை குறைப்பதற்காக சென்னை அணியின் மொத்த மதிப்பு 5 இலட்சம் ரூபாவாக கணக்கு காட்டப்பட்டுள்ளது.

இதனை முந்தைய ஐபிஎல் ஆட்சிமன்றக் குழு ஏற்றுக் கொண்டிருந்தது. இந்நிலையில், தற்போது புதிதாக பொறுப்பேற்றுள்ள ஐ.பி.எல் ஆட்சிமன்ற குழுவின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடந்தது.

அப்போது, சென்னை அணியின மதிப்பை குறைத்துக் காட்டியிருப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு தனியார் அமெரிக்க நிறுவனம் நடாத்திய கணிப்புபடி, சென்னை அணியின் மதிப்பு ரூபா450 கோடி என கூறப்படுகிறது. இதன்படி பிசிசிஐக்கு ரூபா.22 கோடிக்கும் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும். எனவே, இந்த விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையாகி உள்ளது. இது தொடர்பாக அமுலாக்க துறை விசாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# நவாலியூர் வித்தகர் சாம்பசிவம் பாரம்பரிய விளையாட்டு வீரன்



நாளை அவருடைய நினைவு நாள்

வடமாகாணத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களில் தலைசிறந்த விளையாட்டு வீரராக திகழ்ந்தவர் நவாலியூர் நவரட்ணம் சாம்பசிவம்.

ஆனைக்கோட்டையில் பிறந்து நவாலி வடக்கு புலவர் வீதியில் வாழ்ந்து வந்த இவர் கடந்த 27 ஆம் திகதி இறைபதம் எய்தினார்.

வடக்கின் சிலம்படி வித்தகராகவும் பல இளம்வீரர்களுக்கு சிலம்புப் பயிற்சி வழங்கி அவர்களை யாழ்.மாவட்டத்திலும் ஏனைய வெளிமாவட்டங்களிலும் போட்டிகளில் ஈடுபட வைத்து பல பரிசில்களையும் சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றெடுப்பதற்கு பல்வேறு வகைகளிலும் பயிற்சி வழங்கிய உன்னத மனிதராக சாம்பசிவம் விளங்கினார்.

சாம்பசிவம் சிலம்படி, கொம்பு, தீப்பந்தம் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்களில் கைதேர்ந்த இவருக்கு 1995 இல் வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற மாகாண போட்டியில் சகல போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்று விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்ற ஒரு வீரராக ர.சாம்பசிவம் விளங்கியதோடு அனைவரது பாராட்டுக்களுக்கும் உரியவராக திகழ்ந்தார்.

பிற்காலங்களில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஜே.சி.ஐ.ரி) பாதுகாப்பு மேற்பார்வையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று பன்முக சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சாம்பசிவம் சிறந்த வர்ணம் தீட்டும் (Best painter) கலைஞராகவும் வலம் வந்தார்.

ஆலய சேவைகளிலும் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலைய உறுப்பினராகவும் இருந்து பல பணிகளை மக்களுக்காக முன்னெடுத்த உன்னத மனிதராக மக்களுக்கு தம்மை அர்ப்பணித்து இறுதி வரை மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்த சாம்பசிவம் என்ற மானிடம் மறைந்த 31 ஆம் நாளான நாளைய தினத்தில் அவரை நினைவு கூரவுள்ளோம்.

சே.ரமேஸ்

**IPL**

## ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்

முப்பை எதிர் ஹதராபாத்
இடம் :- மும்மை
நேரம் :- மாலை 4.00 மணி

சென்னை எதிர் பஞ்சாப்
இடம் :- சென்னை
நேரம் :- இரவு 8.00 மணி

# மும்பைக்கு எதிரான தொடரில் டில்லி அணி அபார வெற்றி



மும்பை அணிக்கெதிரான ஐ.பி.எல் தொடரின் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற போட்டியில் டில்லி டேர்டெ வில்ஸ் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

8 ஆவது ஐ.பி.எல் தொடரின் 21 ஆவது போட்டியில் மும்பை இன்டியன்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

டில்லி பெரோஷா ·கோட்லா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி டில்லி அணியின் தொடக்க வீரராக களமிறங்கிய மயான்க் அகர்வால் 1 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார்.

ஆனால் அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் டும்னி மற்றொரு தொடக்க வீரரான ஸ்ரீரியாஸ் ஐயருடன் இணைநது அணியின் ஓட்டத்தை குவித்தார்.

156 ஓட்டங்கள் குவித்த போது ஸ்ரீரியாஸ் அரை சதம் கடந்து 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ஏஞ்சலா மத்தியூஸ் 17 ஓட்டங்களிலும, அதிகம் எதிர்பார்க்கப்பட்டு சொதப்பி வரும் யுவராஜ் 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர் முடிவில் டில்லி அணி 4 விக்கெட் இழப்பிற்கு 190 ஓட்டங்கள் குவித்தது. டும்னி ஆட்டமிழக்காமல் அரைச்சதம் கடந்து 78 ஓட்டங்கள் எடுத்தார்.


பந்துவீச்சில் மும்பை சார்பில் Mitchell McClenaghan 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதனையடுத்து 191 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் மட்டுமே குவித்து 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மீண்டும் தோல்வியடைந்தது.

அதிகபட்சமாக பார்த்திவ் படேல் 28 ஓட்டங்களும், அணித்தலைவர் ரோகித் ஷர்மா 30 ஓட்டங்களும், அம்பதி ராயுடு 30 ஓட்ட்ங்களும் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் டில்லி சார்பில் இம்ரான் தாகிர் 3 விக்கெட்டும், அமித் மிஸ்ரா, ஏஞ்சலா மத்தியூஸ் இருவரும் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக ஸ்ரீரியாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கார் க்றிஸ்வோக்ஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் க்றிஸ் வோக்ஸ் (Chris Woakes) நியூசிலாந்து அணியுடனான வரும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது முழங்காலில் மேற்கொள்ளப் படும் சத்திர சிகிச்சை ஒன்றின் நிமித்தம் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த உலக கிண்ண கிரிக்கட் போட்டித் தொடரின் போது காயத்துக்குள்ளாகி இருந்த அவர் ஓய்வில் இருந்தார்.இந்த நிலையிலேயே அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் ஆறு வாரங்கள் ஓய்வெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. எனவே அவர் எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகின்ற நியுசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காலிறுதிக்கு முன்னேறினர் சாய்னா நேவால், சிந்து



ஆசிய பட்மின்டன் சாம்பியன்ஷிப் தொடரில் சாய்னா நேவால், சிந்து ஆகியோர் காலிறு திக்கு முன்னேறினர்.

உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் ஆசிய பட்மின்டன் சாம்பியன்ஷிப் தொடர் சீனாவின் வுஹான் நகரில் நடக்கிறது.

மகளிர் ஒற்றையர் பிரிவு 3 ஆம் சுற்றுப் போட்டிகள் நேற்று நடந்தன. இதில், உலகின் நம்பர்-1 வீராங்கனையான சாய்னா நேவால், ஜப்பானின் நொசோமி ஒகுஹராவை எதிர்த்து விளையாடினார்.

அபாரமாக ஆடிய சாய்னா ஒரு மணி நேரம் 7 நிமிடத்தில் நொசோமியை 21-14, 10-21, 21-10 என்ற செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார். காலிறுதியில் இவர், 5 ஆம் நிலை வீராங்கனையான சீன தைபேயின் ஜு யிங் தாயை எதிர்த்து விளையாடுகிறார்.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து 21-8, 21-9 என்ற நேர் செட்களில் மக்காவின் தெங் லோக் யுவை வென்றார். காலிறுதியில் சிந்து, முதல் நிலை வீராங்கனையான சீனாவின் ஸுவருயிவை சந்திக்கிறார்.

# தொடர் தோல்விக்குக் காரணம் முறையற்ற இணை ஆட்டமே
## விராட் ஹோலி



ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணி அடுத்தடுத்த தோல்வியை தழுவி வருவது தொடர்பாக அந்த அணியின் அணித் தலைவர் விராட் ஹோலி விளக்கம் அளித்துள்ளார்.

பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிய்ய வீழ்த்தியது.

5 ஆவது ஆட்டத்தில் ஆடிய சென்னை அணி பெற்ற 4 ஆவது வெற்றி இதுவாகும் அதே சமயம் பெங் களூர் அணி தொடர்ச்சியாக 3 ஆவது தோல்வியை சந்தித்துள்ளது.

இது பற்றி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித் தலைவர் விராட் ஹோலி கூறுகையில், தொடர் தோல்வி எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.


தனிப்பட்ட வீரரின் சிறப்பான ஆட்டத்தை விட நல்ல இணை ஆட்டம் அமைய வேண்டியது முக்கியமானதாகும். அது தான் எங்களுக்கு பெரிய பிரச்சினையாக உள்ளது.

நாங்கள் ஒரு அணியாக ஒருங்கிணைந்து செயற்படுவதில் தவறி விட்டோம்.

இந்த குறையை போக்க நாங்கள் கலந்து ஆலோசிக்க வேண்டியது அவசியமாகும். இந்த பிரச்சினையை சரி செய்ய முடியும் என்று நம்புகிறோம் என்று கூறியுள்ளார்.

மேலும் எங்கள் வீரர்கள் இன்னும் புத்திசாலித்தனமாக விளையாட வேண்டும் என்றும், குறிப்பாக சொந்த ஊரில் அதிரடியாக செயற்பட வேண்டும் எனவும் ஹோலி குறிப்பிட்டுள்ளார்.

# தோல்வியை ஈடுகட்டி முன்னேறினார் நடால்



எட்டு முறை சாம்பியனான ரபேல் நடால் சென்ற ஆண்டு சக வீரரான நிகோலஸ் அல்மார் கோவால் தோற்கடிக்கப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு இந்தப் போட்டியின் காலிறுதிச் சுற்றில் அவரிடம் அடைந்த தோல்வியை ஈடு கட்டும் வகையில் தற்போது நடந்து கொண்டிருக்கும் பார்சி லோனா ஓபன் டென்னிஸில் 6-3, 6-1 என்ற செட் கணக்கில் அல் மாக்ரோவை வீழ்த்தியிருக்கிறார் ரபேல் நடால். இதையடுத்து, 13 ஆவது ஸீடில் இத்தாலியின் பாபியோ போக்னினியுடன் மோதுகிறார்.



அவ்வாறு அதிகாரத்தை கைப்பற்ற முடியாது போகுமாயின் அதிக பட்சமான தேசவிரோத குற்றச்சாட்டுக்குள் சிக்கிக் கொண்டு அதற்கான தண்டனையை அனுபவிக்கும் ஒரு நிலைக்குள்

# தேசிய அரசியலில் கட்சிகளின் அணிசேர்க்கை ஒரு புரியாத புதிர்

- சாலையூரான் -

முன்னெப்போதுமில்லாத புதிய அரசியல் கலாசாரமொன்றுக்குள் நமது நாடு சென்று கொண்டிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் பலரும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரே கட்சிக்குள்ளேயே ஆளும் கட்சியாகவும் அவ்வாறே அதன் ஒரு பிரிவினர் தம்மை எதிர்தரப்பாகவும் அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு போக்கு சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையில் இப்போதுதான் முதன்முறையாக நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

நிலைமை இவ்வாறு இருக்கும் போது நாட்டின் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்டால்தான் தமது சொந்த இருப்பையும் வாழ்வையும் உறுதி செய்ய முடியும் என சிந்திக்கும் ஒரு போக்கும் இப்போது தேசியகட்சிகளின் தலைவர்கள் மத்தியில் உருவாகி இருக்கிறது.

தாம் தள்ளப்பட்டுவிடலாம் என்ற அச்சத்தில் தமது அரசியலை தொடர வேண்டிய நிலைக்கு இந்தலைவர்கள் தள்ளப்பட்டிருப்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரி தலைமையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும் இணைத்துக்கொண்டு சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினரும் அவ்வாறே முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் தலைமையில் பங்காளிக்கட்சிகளை இணைத்துக் கொண்ட இன்னொரு பிரிவினரும் சுதந்திரக் கட்சியின் இரு கூறுகளாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கட்சித்தாவலை தடுக்கும் சட்ட மூலத்தை கொண்டுவரப் போவதாக புதிய அரசாங்கம் அறிவித்திருந்த போதும் அது இன்னும் நடைமுறைக்கு வராத ஒரு நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்குள் முளைவிட்டிருக்கும் இரு வேறு தலைமைத்துவங்களின் அணிகள் தம்மை எந்தத் தரப்புடன் இணைத்துக் கொண்டு தமது அரசியல் எதிர் காலத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பதில் ஒரு முடிவுக்கு வர முடியாது அல்லாடிக் கொண்டிருக்கின்றன..

சுதந்திரக் கட்சிக்குள் முரண்படும் இரு தலைமைத்துவங்களுக்கும் அவர்களுக்கான வெவ்வேறு தளங்களில் இருக்கும் தனியான அரசியல் ஆதரவென்பது எதிர்த்தரப்புடன் சமபலத்தை கொண்டிருப்பதாக வெளியே பேசப் பட்டு வரும் நிலையில் எந்தத் தரப் புடன் தம்மை இணைத்துக்கொள்ளலாம் என்பது ஒரு முடிவுக்கு வர முடியாத ஒரு புதிராகவே இருக்கிறது.

மகிந்தவுக்கென அடையாளப்படுத்தப் பட்டிருக்கும் ஆதரவுத்தளங்களில் ஒரு தொடர்ச்சி இப்போது வலுவாக உணரப்பட்டிருக்கின்ற போதும் அவரது தரப்பினர் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்குள் அந்த ஆதரவுத்தளம் சற்று ஆட்டங்கண்டிருப்பதாகவே தோன்றுகிறது.

தேர்தல் பிரசார காலங்களில் இடம் பெற்ற முறைகேடுகளை சந்திரிகா தரப்பினர் எவ்வாறு அடையாளப்படுத்துவார்கள் அது எதிர்த்தரப்பின் தேர்தல் முன்னெடுப்பில் எத்தகைய தாக்கத்தினை செலுத்தும் என்பதும் அவர்களால் சரியாக கணிப்பிட முடியாத ஒரு விவகாரமாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நிலைமை இதுதான் என்றால் தம்மை எந்தத் தரப்பின் ஆதரவாளர்களாக அடையாளப்படுத்தலாம் என்பது குறித்த அணியின் கீழ்நிலை, ஆதரவாளர்களுக்கு மட்டுமன்றி அந்த அணியின் தீர்மானமெடுக்கும் நிலையிலுள்ள



# மைக்கேல் ஜாக்ஸன் 2
## மீற முடியாத தோர் இசைக்கனவு



மைக்கேலின் வாழ்க்கையைப் பற்றிய "ஜாக்ஸன்ஸ்: ஓர் அமெரிக்கக் கனவு" என்ற ஐந்து மணி நேரப் படம் 1992இல் ஒளிபரப்பப்பட்டது. அவரது தாய் கத்தரீனின் "என் குடும்பம்" என்ற சுய சரிதையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட படம் என்பதால் மைக்கேலின் இளமைக் காலத்தையும், அவர் ஒரு இசைக் கலைஞராக உருவானதன் பின்னணியையும் புரிந்து கொள்ளப் பெருமளவுக்கு உதவக் கூடியதாக இருக்கிறது இத்திரைப்படம்.

மைக்கேலின் தந்தை மிகக் கொடூரமானவராக இருந்ததாகவும், அவர் மைக்கேலை பலவிதமாகத் துன்புறுத்தியதுதான் அவரது பிற்கால வாழ்வை வெகுவாக பாதித்ததாகவும் பல பத்திரிகையாளர்கள் எழுதி வருவதுண்டு. ஆனால், 1950 களில் அமெரிக்காவில் ஒரு காதல் ஜோடி முத்தம் கொடுத்துக் கொள்வது கூட வரம்பு மீறிய செயலாகக் கருதப்பட்டது. அப்படிப்பட்ட கால கட்டத்தில், கறுப்பர் இனத்தைச் சேர்ந்த ஒரு கடைநிலைத் தொழிலாளி தன் குழந்தைகளிடம் எப்படி நடந்து கொள்வார்? அது மட்டும் அல்லாமல், மைக்கேலின் தந்தை ஜோச.்.ப் ஒரு தோற்றுப் போன இசைக் கலைஞன். அதனாலேயே தன்னுடைய புதல்வர்கள் பெரும் இசைக் கலைஞர்களாக வர வேண்டும் என்று கடுமையான பயிற்சிகளைக் கொடுத்தார். அந்தச் சிறுவர்கள் அவரைப் போலவே இசையில் அதீதமான திறமையைக் கொண்டிருந்ததும் அப்படி அவர் கடுமையான பயிற்சி அளித்ததற்கு ஒரு காரணமாக இருந்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

உதாரணமாக, மைக்கேலின் மூத்த சகோதரர்கள் நால்வரும் நடனம், பாடல் மற்றும் இசைக் கருவிகளில் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கும் போது மைக்கேலை தந்தை ஜோச.்.ப் தங்கள் பயிற்சிகளில் சேர்த்துக் கொள்ளவில்லை. "நீ சிறுவன்" ஏன்று சொல்லி மறுத்து விடுகிறார். அப்போது மைக்கேலின் வயது நான்கு. பிறகு ஆறு வயதில் ஆரம்பப் பாடசாலையின் பாடல் போட்டியில் மைக்கேல் முதல் பரிசு வாங்கியதும்தான் அவனையும் தங்கள் குழுவில் சேர்த்துக் கொள்கிறார். அதுவும் பாடகனாக அல்ல; ட்ரம்ஸ் வாசிப்பவனாக. பிறகு ஏழு வயதில்தான் மேடையில் "ஜாக்ஸன் 5" குழுவில் பாட ஆரம்பித்தார் மைக்கேல்.

கத்தரீனின் புத்தகத்தையும், அதை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட மைக் கேலின் சரிதம் பற்றிய இந்தப் படத்தையும் பார்த்தால் மைக்கேலின் தந்தை அந்தக் கால கட்டத்தில் இருந்த ஒரு வழக்கமான தந்தையாகத்தான் இருந்திருக்கிறார் என்று தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல், மைக்கேல் மற்றும் அவருடைய மூத்த சகோதரர்களின் இசைப் பயிற்சிக்காகவும், அவர்களது திறமை வெளியுலகத்துக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும் மைக்கேலின் தந்தை ஜோச.்.ப் தன்னுடைய சொந்த



வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கிறார்.

ஏழு பிள்ளைகளும் மனைவியும் சேர்ந்து மொத்தம் ஒன்பது பேருக்கு ஒரே ஒரு சிறிய அறையைக் கொண்ட வீட்டில் வாழ்ந்தபடி தன் பிள்ளைகளின் இசைப் பயிற்சிக்காகவும், பிறகு அவர்களைக் கொண்டு தான் அமைத்த "ஜாக்ஸன் 5" இசைக் குழுவுக்காகவும் ஒருமுறை பெரும் அளவிலான இசைச் சாதனங்களை வாங்கி வருகிறார் ஜோச.்.ப்.

"நீ என்ன பைத்தியமா?" என்று கேட்டு சண்டை பிடிக்கும் கத்தரீனின் ஆட்சேபனைகளை அவர் பொருட்படுத்துவதே இல்லை. அவரைப் பொறுத்தவரை, தன் குழந்தைகளின் இசைக் குழு நாடெங்கும் பிரபலமாக வேண்டும். அவருடைய இந்தக் கனவு "ஜாக்ஸன் 5" இசைக் குழு ஆரம்பிக்கப்பட்ட உடனேயே நிறைவேறி விடுகிறது. தாங்கள் கலந்து கொள்ளும் போட்டிகள் அனைத்திலும் பரிசுகளைக் குவிக்கிறார்கள் ஜோஸ.்.பின் குழந்தைகள். ஒன்பது வயதிலேயே மைக்கேலுக்கு ஒரு பிரபல பாடகனுக்கு உரிய அந்தஸ்து கிடைத்து விடுகிறது.

மைக்கேல் மேடையில் பாடும் போது இப்போது பார்வையாளர்களிடம் நாம் கண்ட அதே பித்துப் பிடித்த எதிர்வினையையே அப்போதும் பார்க்க முடிகிறது. இதற்கு மைக்கேலின் திறமை தவிர, ஜோஸ.்.பின் இடைவிடாத உழைப்பும், தன் குழந்தைகள் மீது அவர் வைத்த தீவிர நம்பிக்கையும்தான் காரணம். இதற்காக ஜோஸ.்.ப் தன் மகன்களிடம் மிகக் கடுமையாக நடந்து கொண்டார் நடனத்தில் ஒரு அடி பிசகினாலும் பெல்ட்டால் அடித்தார். இதைத்தான் இப்போது பல விமர்சகர்கள் மிகவும் அசாதாரணமான விஷயமாகக் கருதி எழுதுகின்றனர். இதெல்லாம் நம போன்ற மூன்றாம் உலக நாடுகளில் கிராமப் புறங்களில் இன்றைக்கும் காணக் கூடிய அன்றாட நிகழ்வுகளாய் இருப்பது இந்த மேற்கத்திய விமர்சகர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய விமர்சகர்களும் இதே பல்லவியைப் பாடலாமா என்பது ஒரு கேள்வி.

இசையிலும் நடனத்திலும் தான் கொடுக்கும் கடும் பயிற்சிகளுக்காக ஜோஸ.்.ப் தன் மகன்களை மற்ற சிறுவர்களைப் போல் விளையாட அனுமதிக்கவில்லை. ஓய்வெடுக்க விடவில்லை. இரவும் பகலும் எந்நேரமும் பயிற்சியிலேயே அவர்களை ஈடுபட வைத்தார். அதனால்தான் அப்போது உலக அளவில் முன்னணிப் பாடகியாக இருந்த டயானா ராஸ் ஒன்பதே வயதான மைக்கேலுடன் மேடையில் ஒன்றாகப் பாடினார். மைக்கேலின் வாழ்க்கையில் நடந்த அந்த மிக முக்கியமான சம்பவம் உலகின் பிரசித்தி பெற்ற இசை அரங்குகளில் ஒன்றான அப்பல்லோ தியேட்டரில் (நியூயோர்க்) நடந்தது. "ஜாக்ஸன் 5" குழுவின் முதல் ஆல்பத்தை வெளியிட்டவரும் டயானா ராஸ் தான்.

- சாருநிவேதிதா -

ஆனால் இந்த இடத்தை அடைவதற்காக மைக்கேல் இழந்தது மிகவும் அதிகம். "இரவு இரண்டு மணிக்கு என் அப்பா எங்களை எழுப்புவார். மூன்று மணிக்கு ஏதாவது ஒரு க்ளப்பில் இசை நிகழ்ச்சி இருக்கும். இப்படி எல்லா அமெரிக்க நகரங்களிலும் பாடி இருக்கிறேன். அப்போது என் வயது ஏழு இருக்கும்" என்கிறார் மைக்கேல்.

(தொடரும்)

தரப்பினருக்கும் கூட கணிப்பீட்டுக்கு முடியாத ஒரு விவகாரமாகவே இருக்கிறது.

இந்த நிலைமையின் போக்கு பற்றிய அவதானிப்பில் ஒரு தரப்பை வீழ்த்துவதற்கு மற்றைய தரப்பு எத்தகைய துருப்புச் சீட்டை பாவிக்கும் அது எத்தகைய பாதிப்பை எதிரணிக்கு ஏற்படுத்தும் என்பதை இருதரப்பும் ஒரு மூடு மந்திரமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் மூன்றாவது தரப்பாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியும் அவரது அணியினரும் தம்முன்னாலுள்ள சுதந்திரக் கட்சியின் இரு அணிகளை தமக்கு வசதியாக கையாளும் தரப்பாக இருப்பார்களா அன்றி அவர்களால் கையாளப்படும் ஒரு அணியாக மாறிவிடுவார்களா என்பது நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் அவர்களுக்கான வாக்கு வங்கி எவ்வாறு அமைகிறது என்பதை பொறுத்தே இருக்கும்.

இதற்கிடையில் இந்த மூன்று தரப்புக்கும் இடையே நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பதாக இடம்பெறவுள்ள கட்சித்தாவல்களும் புதிய அணிசேர்க்கையும் அந்தந்த கட்சிகளின் ஆதரவுத்தளத்தை பலப்படுத்தும் அவ்வாறே பலவீனப்படுத்தும் ஒரு செயன்முறையாக இருக்கும்.

ஒரு கொள்கைக்காக கட்சி அரசியலை ஆதரிக்கும் பாரம்பரியம் மறக்கப்பட்டு பலம்பெறும் தரப்பு எது என்பதை மாத்திரம் கணித்து அதன் பின்னால் தற்காப்பு நிலை எடுக்கும் சமகால அரசியல் பாரம்பரியத்தில் தமக்கான சொந்த அரசியலை எமது மக்கள் மறந்து நிற்பது அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு தேவையற்ற ஒரு தீமை என்பதை மாத்திரம் சுட்டுவது பொருத்தம்.

# லோசர்



திபெத்தியர்கள் தங்களுடைய புதுவருடத்தின் முதல்நாளை "லோசர்" என அழைக்கின்றனர். லோசரை திபெத், இந்தியா, பூட்டான், நேபாளம் மற்றும் சீனாவில் கொண்டாடுகின்றனர். இந்தியாவில் திபெத்தியர்கள் அகதிகளாக குடியேறி மறுவாழ்வு வாழும் இடங்களில் கொண்டாடுகிறார்கள்.

திபெத்தியர்களைத் தவிர, யால்மோ, ஷெர்ப்பா, தமங், குராங் மற்றும் பூட்டியா இனத்தினரும் லோசரை கொண்டாடுகின்றனர். இப்படி விழா கொண்டாடுவது 9 ஆவது திபெத்திய மன்னர் குங்கியால் என்பவரின் காலத்திலிருந்து துவங்கியது. முதலில் திபெத்தியர்கள் உள்ளூர் குல தெய்வங்களுக்குத்தான் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தனர். ஆனால் மன்னர் குங்கியால் தனது குடிமக்களை முழுமையாக புத்தமதத்திற்கு மாற்றி, புத்த மதம் சார்ந்த விழாவாக கொண்டாடும்படி செய்தார். இந்த லோசர் பொதுவாக சீன கலண்டர் நாளுடன் ஒத்தே வரும்.

திபெத்திய கலண்டரின் படி 12 ஆவது மாதத்தில் 29ஆம் நாளன்று லோசர் விழா துவங்குகிறது. மொத்தம் 3 நாட்கள் இந்த விழா நடக்கிறது.

முதல்நாள் வீட்டில் சங்கோல் (Chankol) என்ற பியர் தயாரிக்கப்படுகிறது. வீடு சுத்தம் செய்யப்பட்டு, புது வண்ணம் அடிக்கப்படுகின்றது.

இரண்டாம் நாள் அன்று துறவி மடங்களுக்குச் சென்று, அங்கு நடக்கும் சிறப்பு பிரார்த்தனைகளில் மக்கள் பயபக்தியுடன் கலந்து கொள்கின்றனர். அதுசமயம் அங்கு புனித கேக் செய்து புத்தருக்கு படைக்கின்றனர்.

அதே சமயம் 9 தானியங்களால் உருவாக்கப்பட்ட மாவைப் பிசைந்து உருண்டையாக்குகின்றனர். இதனுள் மிளகாய், உப்பு, பஞ்சு, அரிசி, கரி என ஏதாவது ஒன்றை வைத்துப் பிடிக்கின்றனர். பூஜை முடிந்து இந்த உருண்டை திபெத்திய பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றது. இந்த உருண்டையப் பெறுபவர் உடனே அதனை உடைத்துப் பார்த்து தன் அதிர்ஷ்டத்தை அறிகிறார்கள். உள்ளே மிளகாய் இருந்தால், அந்த வருடம் முழுவதும் வாங்கியவர், வளவளவென பேச வேண்டிவரும் எனப் பொருள். உப்பு, அரிசி, பஞ்சு இருந்தால் சங்கடங்கள் வரும். அவற்றைச் சமாளித்து வெற்றி கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள் எனப் பொருள்.

பிறகு வெளியே "நன்றி செலுத்தும் நாள்" நடக்கிறது. உள்ளூர் கலைஞர்கள் மற்றும் தூரதேசத்திலிருந்து வந்த கலைஞர்கள் ஆடிப்பாடி பல மணி நேரத்திற்கு பொதுமக்களை மகிழ்விக்கிறார்கள். பிறகு அனைவரும் புதுவருடம் வருவதற்கும் நன்கு அமைவதற்கும் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு பிரிகிறார்கள்.

அடுத்தநாள் விடியற்காலை பெண்கள் சீக்கிரமே எழுந்து பார்லியில் வைன் தயாரிக்கிறார்கள். லேசாக விடிய ஆரம்பித்ததும் வாளியை எடுத்துக்கொண்டு அருகில் உள்ள ஆற்றுக்குச் செல்கின்றனர். முதல் தண்ணீரை அவரவர் வாளியில் எடுக்க பெண்களுக்குள் போட்டியே நடக்கிறது. யார் புது தண்ணீரை சுத்தமாக, எடுத்து வருகிறார்களோ, அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் அந்த வருடம் முழுவதும் நல்லபடியாக இருக்கும் என்ற நம்பிக்கை.

எடுத்து வந்த தண்ணீரை, கலந்து அனைவரும் குளித்து புத்தாடை அணிந்து, பார்லி வைனை அருந்துகின்றனர். விருந்துக்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. முதியோர்கள் வணங்கப்படுகின்றனர். பெண்களுக்கும், இளையோருக்கும் பரிசுப் பொருள்கள் தரப்படுகின்றன. அன்று இனிமையாகப் பொழுது கழிகிறது.

## நெடுஞ்சாலை நீர்வீழ்ச்சி

போர்த்துக்கல் நாட்டில் மெடீரா என்ற இடத்தில், சாலையை ஒட்டி, ஓர் நீர்வீழ்ச்சி உள்ளது. இதற்கு, நெடுஞ்சாலை நீர்வீழ்ச்சி என்று பெயர். இச்சாலையை கடக்கும்போது, காருக்குள் உட்கார்ந்தபடியே நீர்வீழ்ச்சியில் நனையலாம். இதனால், சிலசமயம், இந்த நீர்வீழ்ச்சியை கடக்க நீண்ட நேரம் ஆகி, போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. இந்த நீர்வீழ்ச்சியை



கடப்பதற்குள் கார்கள் சுத்தமாகி, "பளீச்"சென்று ஆகிவிடுகிறது. கார் கழுவும் பணம் மிச்சம்!

## கறுப்பு மழை!

ஒரு முறை [illegible]தாலி நாட்டிலுள்ள ஹஸ்னியா மா[illegible]ட்டத்தில் பெய்த மஞ்சள் மழை தெருவெங்கும் மஞ்சள் வெள்ளம் [illegible]ால் ஓடியது. காற்றில் கலந்துள்ள கந்தகமே இந்த மஞ்சள் நிற மழைக்குக் காரணம் என்றனர் அறிஞர்கள்.



[illegible]துபோலவே அமெரிக்காவில் [illegible] நாள் கறுப்பு மழை பெய்தது. [illegible]லக்கரிப்புகை, ஆலைகளின் கரும் புகை ஆகியவை காற்றில் கலந்து மாசுபட்டதே கறுப்பு மழை பெய்ததற்கு காரணம் என்று கூறப்பட்டது.

## வறுமையில் வாடும் இந்திராவின் தோழி!

படத்தில் இருக்கும் பெண்மணி, இந்திரா காந்தியின் நெருங்கிய தோழி. அத்துடன், இவரது படத்துடன் இந்திய அரசு தபால் முத்திரையும் வெளியிட்டுள்ளது. இத்தனை சிறப்புக்குரிய பழம்பெரும் நடனக்கலைஞரான தாரா பாலகோபால் என்ற இத்தமிழ்ப்பெண்மணி, இன்று வறுமையில் வாடுவதாகச் சொல்லப்படுகிறது.

தமிழகத்தில், பிரபல நாடகக் கலைஞரான நடேச ஐயரின் பேத்தி. இவரும் நடனத்தில் சிறந்து விளங்கியதால் நடிகை ஹேமமாலினியின் குருவாகவும் இருந்தார். கல்லூரிப் பேராசிரியராக பணிபுரிந்த தாரா பாலகோபால், 1963இல் ரஷ்யாவில், இந்திய கலாசாரத் தூதுவராகவும் இருந்தவர்.

இவர் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கல்லூரியிலிருந்து ஓய்வூதியம் எதுவும் கிடைக்காததால், அதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததில், அனைத்து சொத்துகளையும் இழந்து,



இன்று வறுமையில் வாடுகிறார், இந்த பழம்பெரும் நடனக் கலைஞர்.

## சிவப்பு விளக்குப் பெண்ணின் இலட்சியம்!

மும்பை சிவப்பு விளக்கு பகுதியில் உள்ள காபரே நடனப் பெண்ணின் மகள் ஷீதல். 15 வயது ஆகும் முன்னதே, விலைமாது



ஆக்கப்பட்டவள். சில ஆண்டுகளில் இந்த வாழ்க்கை மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவளுடைய தாயாரும் மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைய வேண்டும் என்று விரும்பினார். அங்கு வருவோரும் ஷீதலுக்கு உதவ முன்வந்தனர். அவர்களின் முயற்சியின் விளைவாக, ஷீதல், வொஷிங்டன் இசைப் பல்கலைக்கழகத்தில், ட்ரம்ஸ் வாசிக்கும் பயிற்சி பெற தேர்வு செய்யப்பட்டார்.

தற்போது, ட்ரம்ஸ் பயிற்சியில் தீவிரமாக இருக்கும் ஷீதல், "15 வயதில் "பாலியல் தொழிலாளி" ஆனதால், என்னுடைய உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டது. இதனால், உடலையும், மனதையும் சீராக்க, பல ஆண்டுகள் தேவைப்பட்டன. தற்போது, நான் கற்றுக் கொண்டிருக்கும் இந்த இசையால், சிவப்பு விளக்குப் பகுதி பெண்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் அதுதான், என் இலட்சியம்..." என்கிறார்.

# மருத்துவ தாவரங்கள்




- கற்பூரவல்லி இலைச் சாறு 5 மில்லி, நல்லெண்ணெய் 5 மில்லி, கொஞ்சம் சீனி மூன்றையும் நன்றாக கலந்து பெரியவர்களுக்கு 2 தேக்கரண்டி, சிறியவர்களுக்கு 1 தேக்கரண்டி. 3 வயதுக்குட்பட்ட குழந்தை[illegible]ளுக்கு அரை [illegible]க்கரண்டி கொடுக்க சளிகரைந்து [illegible]ெளியாகும், இரும[illegible] குணமாகும்.
- கற்பூரவல்லி இலைச்சாறுக்கு சமமாக தேங்காய் எண்ணெய் கலந்து கா[illegible]ய்ச்சி தலைவலிக்கு தடவ வலி குறைந்து குணம் தரும். காதுவலிக்கு ஒரு சொட்டு விட காது வலியும் நீங்கும்.
- 1அல்லது 2 கற்பூரவல்லி இலையைச் சிதைத்து 150 மில்லி நீரில் போட்டு அத்துடன் 1 தேக்கரண்டி சோம்பு சேர்த்து காய்ச்சி அத்துடன் பனைவெல்லம் சேர்த்துக் காய்ச்சி 100 மில்லியாக சுண்டிய நீரை குடிக்க வயிற்று உப்புசம் நீங்கும். வயிற்றில் உள்ள வாயுத்தொல்லை குணமாகும்.
- பசும்பாலுடன் சில துளசி இலைகளைப் போட்டுக் காய்ச்சி குழந்தைகளுக்குக் கொடுத்தால் குழந்தைகளை நோய் அணுகாது.
- துளசி இலையுடன் இஞ்சித் துண்டையும் சேர்த்து மென்று தின்று சுடுநீர் குடித்தால் சளியும், சளியினால் மூக்கில் ஏற்படும் புண்ணும் குணமாகும்.
- துளசியுடன் சுக்கைத் தட்டிப். போட்டு கஷாயம் வைத்து குடித்து வந்தால் காய்ச்சல் நீங்கும்.
- மூன்று நாள்கள் துளசி கஷாயத்துடன் இஞ்சி, தேன் கலந்து சாப்பிட்டால் காய்ச்சல் அடியோடு மறையும்.

# புதிர்ப்போட்டி இல. 36

**(01).பின்வரும் வினாக்கள். ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள சொற்களில் இரு சொற்கள் ஒத்த கருத்துடையவை அவற்றைத் தெரிவு செய்து ஒத்தஇலக்கங்களை எழுதுக**

உ+ம் :- அங்காடி, முச்சந்தி, சந்தி, சந்தை, பலசரக்குக்கடை இதில் அங்காடி, சந்தை ஒத்தகருத்துடையவையாக இருப்பதால் (1,4) என்பதே விடை

01.முறம், அறம், புறம், சுளகு, திருகுவலை ( )

02.உதிரம், உதரம், வயிறு, முதுகு, காலை ( )

03.அடர்த்தி, மருதம், அடவி, முல்லை, காடு ( )

04.நாகம், களிறு, ஏறு, உரகம், அரவம் ( )

05.சூப்பிடுதொலை, கேள்வி, சேய்மை, காதம், அறுபதுபாகம் ( )

06.வேங்கை, யானை, தும்பி, வண்ணாத்தி, ஓணான் ( )

07.கடல், வாவி, அடவி, பொய்கை, சமுத்திரம் ( )

08.தேவர், மாதவர், நாகர், முனிவர், அசுரர் ( )

09.கருங்கை, முருங்கை, உள்ளங்கை, தடங்கை, சுரங்கவழி ( )

---

**(02).அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களுள் ஒவ்வொரு கூற்றையும் சரியாக பூர்த்தியாகும் சொல்லின் கீழ்க் கோடிடுக**

10.உதைப்பந்தாட்டப்போட்டி நடைபெறும் போது 25 பேர் கிரிக்கெட்டிற்கு
(11, 15, 24, 22)

11.கடலில் மீன், வானத்தில்
(முகில், நட்சத்திரம், விமானம், பறவை)

12.பனைக்கு வடலி, கமுகுக்கு
(நாற்று, குட்டி, பிள்ளை, கன்று)

13.மீனின் இளையது குஞ்சு, பாம்பின் இளையது
(பார்ப்பு, குட்டி, பறழ், சிற்றரவு)

14.நதிகளுக்கு மகாவலி, மலைகளுக்கு
(சிவனொளி, பேதுருதாலகால, சிகிரியா, நமுனுகுலகந்த)

15.ஜப்பானியர்களுக்கு பலகை வீடாயின், எஸ்கிமோவருக்கு (குளிர், பனி, இக்ளு, அடைந்தவீடு)

16.சங்ககாலத்திற்கு சங்கமருவிய காலம் நாயக்கர் காலத்திற்கு
(பல்லவர், சோழர், சேரர், ஐரோப்பியர் காலம்)

17.நீரால் தோன்றுவது வயிற்றுளைவு, காற்றால்
(குக்கல், தலையிடி, காய்ச்சல், ஈர்ப்பு வலி)

18.விமானத்திற்கு விமானி கப்பலுக்கு
(சுக்கான் பிடிப்பவர், மீகாமன், படகோட்டி, கடலோடி)

19.பூனைக்கு குட்டி, எருமைக்கு
(குழவி, குருளை, கன்று, குட்டி)

20.ஆட்டிற்கு பிழுக்கை, கழுதைக்கு
(எச்சம், விட்டை, இலத்தி, பிழுக்கை)

21.வண்டு இரையும் பல்லி
(பேசும், சொல்லும், கத்தும், டிக்டிக்)

22.களிறுக்கு பிடி, ஒருத்தலுக்கு
(பிறை, மந்தி, பசு, பெட்டை)

# பொது அறிவு வினாக்கள்

23. உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?

24.வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள்?

25 ஜப்பானின் தலைநகர்?

26 பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?

27 திரை அரங்குகளே இல்லாத நாடு?

28 உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம்?

29 எந்தக் கண்டத்தில் கங்காரு, பனிக்கரடி உள்ளது ?

30 நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு ?

31 உலகிலேயே உயரமான சிகரம் ?

32 மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் ?

---

# விடுகதைகள்

33.பல அடுக்கு மாளிகையில் இனிப்பு விருந்து. அது என்ன?

34.உடல் கொண்டு குத்திடுவான் உதிரிகளை ஒன்றிணைப்பான். அது என்ன?

35.ஆள் இறங்காத குளத்தில் ஆடி இறங்கி கூத்தாடுது. அது என்ன?

36.பேசுவான் நடக்கமாட்டான் பாடுவான் ஆடமாட்டான். அவன் யார்?

37.தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார்?

38.காலடியில் சுருண்டிருப்பாள் கண்ணீர் என்று குரலிசைப்பாள். அவள் யார்?

39.கூட்டுச் சேர்ந்து கோட்டைக் கட்டும் மாட்டுவோரை மடக்கித் தாக்கும். அது என்ன?

40.எண்ணெய் வேண்டா விளக்கு எடுப்பான் கை விளக்கு. அது என்ன?

41.வித்தில்லாமல் விளையும் வெட்டாமல் சாயும். அது என்ன?

42.அம்மா பின்னிய நூலை அவிழ்த்தால் போச்சு. அது என்ன?

43.தலையை அழுத்தினால் வாயைத் திறக்கும். அது என்ன?

44.கடமை வீரன் காக்கிச் சட்டை அணிய மாட்டான். அவன் யார்?

45.மாண்டவனுக்கு மந்திரம் போட்டால் மீண்டும் உயிர் வரும். அவன் யார்?

46. குட்டை மரத்தில் குண்டன் தொங்குகிறான். அவன் யார்?

47. விரல் உண்டு நகம் இல்லை. கை உண்டு தசை இல்லை. அது என்ன?

---

**(03).கீழே உள்ள வினாக்களில் முதல் சொல்லுக்குப் பின்னே உள்ள சொற்களில் இருந்து முதல் சொல்லிற்கு எதிரான அல்லது மிகக்கிட்டிய எதிரான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

48.சன்மார்க்கம் - நன்மார்க்கம், துன்மார்க்கம், தாசமார்க்கம், வன்செயல்

49.இழிதகவு - பெருமிதம், தேகவம், தேதகவு, நிகழ்தகவு

50.வெறுப்பு - அசட்டை, உபேட்சை, நம்புதல், ஏற்றல்

51.கடல் - கரை, வானம், தரை, சமுத்திரம்

52.பாலா - சிறுவர், விருத்தர், பாலி, பெரியா

**அனுப்பவேண்டிய முகவரி**

**புதிர்ப்போட்டி இல: -------**
**373, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.**

---

# சென்றவார விடைகள்

(01).01.6

02.50.1ம், 3ம் 5ம் எண்களுக்கு இடையிலான வித்தியாசத்தைப் போன்று 2ம் 4ம் 6ம் எண்களுக்கிடையேயான வித்தியாசம்

03.5 வர்க்கமும் வர்க்கமூலமும்

04.62,14,15,16 ஆகியவற்றில் நடு எண்ணாகிய 15 இன் இருமடங்கு 30, 31, 32 ஆகவே 31 இன் இருமடங்கு 62

05.333 முதல் இரு சோடி எண்களுக்கிடையேயான தொடர்பு

06.110 கடைசி எண்ணுடன் ஒன்றினை கூட்டிப் பெருக்குதல்

07.10 / 99 08.1044 4 4 - 1

09.3 முதலாவது எண்ணின் கனமூலத்தை அடுத்த எண்ணால் பெருக்குதல்

10.3609 x 4 = 36 ஐ 9இன் அடுத்த எண்ணான 10 ஆல் பெருக்குதல்

| | |
|---|---|
| (02).11.நிசி,இரவு | 12.நீர்,கலம் |
| 13.புகழ்,கீர்த்தி | 14.திருமணம்,வதுவை |
| 15.வற்சரம்,ஆண்டு | 16.வறுமை,இலம்பாடு |
| 17.கொழுநன்,கணவன் | 18.கன்னல்,கரும்பு |
| 19.குழந்தை,மகவு | 20.வித்தகம்,ஞானம் |
| (03).21.தபுதாதரன் | 22.மருந்து |
| 23.கேள்வி | 24.அகவியது |
| 25.மின்டோனா | 26.செவ்வாய் |
| 27.இரங்கல் | 28.மை |
| 29.சிவப்பு | (04).30.4 |
| 31.3 | 32.4 |
| 33.4 | 34.2 |
| 35.4 | 36.3 |
| 37.4 | 38.4 |

# சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- நா.பிரியந்தினி
தரம் :- 10
பாடசாலை :- யா /வேம்படி மத்திய கல்லூரி

பெயர் :- ம.மௌலிகா
தரம் :- 11
பாடசாலை:-யா/உடுவில் மகளிர் கல்லூரி

பெயர் :- மு.திவ்யா
தரம் :- 10
பாடசாலை:-யா/வேம்படி மகளிர் கல்லூரி

பெயர் :- சா.உதயன்
தரம் :- 11
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ..............................

பாடசாலை :- ..............................

கல்வி கற்கும் தரம் :- ..............................

வீட்டு முகவரி :- ..............................

தொ.பேசி இலக்கம் :- ..............................

# வறிய மாணவர்களுக்கு உதவும் லங்காதிறன் விருத்திமையம்

## ஐக்கிய இராச்சிய பொறியியலாளர் தெரிவிப்பு



(முல்லைத்தீவு)

வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாதுள்ள மாணவர்கள் பலர் திறமைசாலிகளாகவே காணப்படுகின்றனர். எனவே இவ்வாறு கல்வியை இடைநிறுத்தியவர்களுக்கு உதவும் முகமாகவே லங்கா திறன் விருத்தி மையம் இலங்கையில் தனது கிளையை ஆரம்பித்துள்ளது என் ஐக்கிய இராச்சிய பொறியியலாளர் லியன் அன் போல் தெரிவித்துள்ளார்.

லங்கா திறன் விருத்தி மையத்தின் கிளையை முல்லைத்தீவில் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

லங்கா திறன் விருத்தி மைய இயக்குநர் எஸ். செந்தில் லிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில் இளம் சந்ததியினர் சரியான வழிகாட்டல் மற்றும் கல்வி அறிவு என்பவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் ஏனெனில் அவர்களே எதிர்கால நாட்டை ஆள்பவர்கள் அவர்களின் பாடசாலை கல்வி வறுமையினால் பாதிக்கப்பட்ட பலர் இங்குள்ளனர். அவர்களுக்கு ஓர் மாற்று வழியை காட்டி அவர்களையும் வாழ்வில் முன்னேற்றவேண்டும் என்பதற்காகவே நாம் லங்கா திறன் விருத்திமையத்தின் ஹோட்டல் பயிற்சி நெறியை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளோம் நாம் ஏற்கனவே ஐக்கிய இராச்சியம், இந்தியா போன்ற இடங்களில் எமது கிளையை ஆரம்பித்து பயிற்சி நெறியை வழங்கி வருகின்றோம் ஹோட்டல் பயிற்சி நெறியை பூரணமாக பூர்த்தி செய்தவர்கள் குன்றவாகவே உள்ளனர். இதனால் இத்துறையில் அதிக சம்பளத்துடனான வேலைவாய்ப்பு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் உள்ளது.

லங்காதிறன் விருத்திமைய இயக்குநர் செந்தில் லிங்கம் பெரும் சவால்களுக்கு முகம் கொடுத்து தனி ஒருவராக தனது தாய் நாடாகிய இலங்கையில் கிளைகளை ஆரம்பித்து சேவையாற்றி வருகின்றார். எனவே இந்த வாய்ப்பினை சரிவர பயன்படுத்தி இளம் தலைமுறையினர் வாழ்வில் உயரவேண்டும் என்றார்.

முல்லைத்தீவு முள்ளியவளையில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற திறப்பு விழாவில் வவுனியா சென்பீற்றர் தேவாலய அருட்தந்தை ஜோன் செல்வகுமார், ஓய்வு நிலை உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி சி. குகனேசன், ஐரோப்பிய வைத்திய நிபுணர் மற்றும் ஓய்வுநிலை தொழில் நுட்பவியலாளர் எம். எக்ஸ் சர்வானந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (54)

# மன்னார் மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர்

(மன்னார்)

மன்னார் தீவுப்பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களைச்சேர்ந்த மக்களை அவர்களது கிராமங்களின் குறைநிறைகளை அறியும் நோக்கோடு கடந்த புதன்கிழமை தனது விஜயத்தை கிராமங்கள் தோறும் மேற்கொண்டார் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் அதன் அடிப்படையில் பேசாலை 50 வீட்டுத் திட்டம், பேசாலை 100 வீட்டுத்திட்டம், துள்ளுக்குடியிருப்பு, வசந்தபுரம், நடுக்குடா, பாவிலுபட்டங்கட்டிகுடியிருப்பு, கவயன்குடியிருப்பு, கீளியன் குடியிருப்பு, செல்வேரி, பருத்திப்பண்ணை, கட்டுக்காரன்குடியிருப்பு, பூலாருகுடியிருப்பு, படப்பிடி ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்ததோடு அப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் செய்வதாகவும் வீதிகள், மின்சாரம் போன்ற சில பிரச்சினைகளை உடன் தீர்த்து வைப்பதாகவும் தெரிவித்தார், (160)

# 20 ஆவது ஆண்டு விழா

மலையக கலை கலாசார சங்கத்தின் 20ஆவது வருட பூர்த்தி விழா ஜூன் மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த பல வருடங்களாக கண்டியிலும், கடந்த வருடம் கிழக்கு மாகாணத்திலும் நடைபெற்றுவந்த 'இரத்தின தீபம்' விருது வழங்கும் விழாவினை 2015இல் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. சங்கத்தின் ஸ்தாபகர் கண்டி ராஜா ஜெய்கின்ஸ் தெரிவித்தார்.

இவ் விருது வழங்கும் விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கண்டி ராஜா ஜெய்கின்ஸ் யாழ். வருகை தந்து யாழ்.பிரமுகர்களையும் சந்தித்துள்ளார்.

ஜூன் மாதம் நடைபெறவுள்ள விழாவில் சமூகசேவையாளர் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கல்வியாளர்கள் இரத்தின தீபம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்படுவதாகவும் மலையக கலைஞர்களின் கலை நிகழ்வும் நடைபெறவுள்ள தாகவும், தெரிவித்துள்ளார். (105)

# பனிக்கன்குளம் கிராமத்தை சுற்றி மின்சார வேலி அமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பனிக்கன்குளம் கிராமத்தில் அண்மை நாட்களாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்

இரவு வேளையில் மக்கள் குடியிருப்பினுள் நுழையும் இந்த யானைகளால் மக்களது உடைமைகள் பயிர்கள் நாசமாக்கப்படுகிறது இரவில் வீடுகளில் தங்கக் கூட மக்கள் அச்சமடைவதாக தெரிவிக்கின்றனர் நேற்றுமுன்தினம் யானையினால் குடிமனையொன்றிலிருந்த பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இக்கிராமத்தை சுற்றி மின்சார வேலியொன்றினை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் பல தடவைகள் அழிவுகள் நடந்தும் எந்தவிதமான நஷ்ட ஈடுகளும் மக்களுக்கு வழங்கப்படவில்லை

இவ்வாறு கஷ்ரப்பட்டு செய்கின்ற பயிர்நிலங்கள் நாளாந்தம் அழிக்கப்படுமாயின் தமது நிலை என்ன என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் எனவே தமக்கு இப் பிரச்சினைக்கான நல்ல ஒரு தீர்வினை பெற்றுத்தர உரிய அதிகாரிகள் முன்வர வேண்டுமெனவும், பாதிக்கப்பட்டவர்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (160)

# வாரம் ஒரு காரம்

## ஆசியாவில் ஒரு நெப்போலியனாம் மகிந்தா!... சிறைவைத்த 100 நாளில் மீண்டும் சிகரத்தைத் தொடுவாரா?....

கூட்டமைப்பின் குறி தவறினால்
குமுறப்போவது அப்பாவித் தமிழ் மக்களே

07 வயதில் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து கொண்ட மாவீரன் நெப்போலியன் தனது பதவிக்காலத்தில் பல நாடுகளுடன் படையெடுத்து இங்கிலாந்திற்கு பல வெற்றிகளைத் தேடிக்கொடுத்தான். பிறருக்கு எதிரியாகவும் துரோகியாகவும் இருந்த நெப்போலியன் தனது சொந்த நாட்டுக்கும் நாட்டு மக்களிற்கும் சிறந்த தலைவனாக இருந்தான்.

பீரங்கிப்படைத் தளபதியாக இருந்தவன் இங்கிலாந்தின் சக்கரவர்த்தியாகவும் ஐரோப்பாவின் சிறந்த ஆட்சிவீரனாகவும் விளங்கினான். மார்கழி மாதக் குளிர் ரஷயப் படைக்கு சாதகமாக இருந்தமையால் தான் நெப்போலியனை ரஷயா தோற்கடிக்க முடிந்தது.

இப்படிப்பட்ட ஓர் நெப்போலியனை மகிந்தவிற்கு ஒப்பிடுவது பொருத்தமானதா இல்லையா என்பது பல வாதப்பிரதிவாதங்களை உண்டுபண்ணினாலும். பெருந்தொகையான சிங்கள மக்கள் மத்தியில் இம் மகிந்தா ஆசியாவின் நெப்போலியனாக இருப்பதை எவரும் மறுக்க முடியாதென்பது தற்போதய செயற்பாடுகள் மூலம் மேலும் வலுப் பெற்று வருகின்றது. ஆட்சியில் இல்லாத போதும் கூட மக்கள் ஆதரவு மேலோங்குவது அச்சத்திற்குரிய ஒன்று.

ஆஸ்திரியா உட்பட பல நாடுகளை வென்று ஐரோப்பாவையே தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நெப்போலியனிற்கு சமனாக விடுதலைப் புலிகளை ஒழித்து பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து துரத்திய தலைவனாக மகிந்தாவை மக்கள் பார்ப்பதில் தவறில்லையென்றும் விமர்சிக்கப்படுகின்றது.

போரிற்கான முடிவினையும் அபிவிருத்தியினையும் தேடித்தந்த ஓர் தலைவனாக சிங்கள மக்கள் தமது பார்வையில் மகிந்தாவைப் பார்க்கின்றனர். இனவாத இருட்டுக்குள் இருந்து செய்நன்றி மறந்து தமிழர்கள் செயற்படுகின்றனர் என்றெல்லாம் அவர்கள் விமர்சிக்கின்றனர்.

100 நாட்கள் கடந்துவிட்டன இன்றுவரை மைத்திரி அரசால் நிறைவேற்றிய செயற்றிட்டத்தோடு ஒப்பிடும் போது வடபகுதி பூராகவும் போடப்பட்ட காப்பற்வீதி பெரிது. ரயில் போக்குவரத்துப் பெரிது. இந்திய வீட்டுத்திட்டங்கள் பெரிது. ஆங்காங்கே அன்று நடந்த அபிவிருத்திகள் பெரிது என்கின்ற பார்வைகளும் ஒரு துருவத்தில் நியாயமானது தான்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தான்தோன்றித்தனமான சிந்தனைகளிற்கு மகிந்த -அரசு இடங்கொடுக்கவில்லையே தவிர தமிழ் மக்களிற்கான அபிவிருத்தியில் துரோகம் செய்யவில்லை. தமிழ் மக்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளிற்கப்பால் சிந்தித்து செயற்படுகின்றனரோ அன்றுதான் இனவாதம் கடந்த ஓர் அரசியல் அங்குரார்ப்பணம் தமிழ் மக்களிற்குக் கிடைக்கும் என்பது நடுநிலைமைச் சிந்தனை வாதிகளின் கருத்தாகும்.

இது ஒரு புறமிருக்க இலஞ்ச ஊழல்களிற்கப்பால் நீதியான ஓர் சுயாட்சியையே தமிழ் மக்கள் விரும்பினர் என்று சிந்தித்தோமானால் அதிலும் நியாயம் உள்ளது தான். ஆனால் அதை இந்த அரசுடன் இணைந்திருந்து தமிழ்த் தேசியக் கூட்மைப்பு பெற்றுவிட்டார்களா?... நிரந்தரமான ஆட்சி மாற்றங்களால் தூர்ந்து போகாத சுயாட்சித்தீர்வு தற்போது கிடைத்து விட்டதா?... கிடைத்திருந்தால் ஆட்சிமாற்றத்தால் பயனுண்டு என்று வாதிட்டிருக்கலாம்.

கோரிக்கைகளை நம்பி வாக்களித்த தமிழ் மக்களிற்குக் கூட்டமைப்பு அதைப் பெற்றுக்கொடுத்ததா?.... 19 ஆவது அரசமைப்புக்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமை மைத்திரி ரணில் அரசின் கையாலாகாத தன்மையையும் அரசின் பலவீனத்தையும் காட்டியுள்ளது. இதை வைத்து சிந்திக்கின்றபோது மீண்டும் மகிந்த அரசு பலம் பெற்றால் கூட்டமைப்பை நம்பிய அப்பாவித்தமிழ் மக்களின் நிலையென்ன?...


ஏற்கனவே மகிந்த அரசு இனவாத இருட்டடி போடுகின்றது எனக் கூறி ஆட்சி மாற்றத்திற்கு அடிப்படையாக இருந்த சிறுபான்மைத் தமிழினம், மீண்டும் அதேயரசால் ஆளப்படுமேயானால் அதன் நிலை என்னவாகும்?

ஒருநாட்டின் சிறுபான்மையினங்கள் பெரும்பான்மையினத்தின் அரசியல் தீர்மானக் கருப்பொருட்களாக என்றுமே மாறக்கூடாது. இருக்கின்ற அரசுடன் இணக்க வழிகளைச் சிந்தித்து நிரந்தர தரவைப் பெற வேண்டுமே தவிர இருப்பதற்கப்பால் சிந்தித்தோமானால் இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் தீர்வின் திசை முகங்கள் தெரியாது.

வடபுலத்து அரசியலை வடிவமைப்பதற்கப்பால் தென்னிலங்கை அரசியலிற்குத் திகதியிட்ட கூட்டமைப்பு அரசியல் மாறினாலும் அதில் பச்சோந்தியாக இருந்து தன் பாதையைமாற்றிவிடும். ஆனால் பாதிக்கப்படப் போவது அப்பாவித் தமிழ் மக்களேயாகும்.

**எதையும் எதிர்ப்பவர்களிற்கு முடிவின் முகவரிகள் என்றுமே தெரிவதில்லை. இதை நம்பி வாக்களிப்பவர்களிற்கு விடிவிற்கான விடிவெள்ளி விரைவில் தெரிவதில்லை.**

- வெண்கட்டியன்





சாவகச்சேரி கல்வயல் நுணாவில்கிழக்கு அருள்மிகு பூர்ணா புஷ்கலா சமேத ஹரிஹர புத்திரஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ கால விசேட பூசை நேற்று முன்தினம் ஆலயதர்மகர்த்தா சிவஸ்ரீ.சு.சிவானந்தன் ஐயா தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. முதல்நாள் நிகழ்வில் பூசைவழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம்.

## யாழ்.மத்திய பேருந்து நிலைய பகுதியில் - முடக்கப்பட்ட சிறு வியாபாரம் மீண்டும் தொடர நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நீண்டகாலமாக சிறு வியாபாரங்களை மேற்கொண்டு வரும் வியாபாரிகளை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவிடாது மேற்கொள்ளப்பட்ட தடை உத்தரவை முன்னாள நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் சிறு கடை வியாபாரிகள் ஆகியோருக்கு இடையில் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் மூவின மக்களையும் உள்ளடக்கிய வியாபாரிகள் தமது வாழ்வாதார தேவைகளை தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்மத்திய பேருந்து நிலயப் பகுதியில் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றனர் என குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்ட சிறுகடை வியாபாரிகளது வியாபார நடவடிக்கைகள் சில நாள்களாக தடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் வியாபாரிகளையும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுதலுக் கிணங்க ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன அழைத்து மேற்கொண்ட சமரச பேச்சுவார்த்தையை அடுத்து இனிவரும் காலங்களில் எதுவித பிரச்சினைகளையும் ஏற்படுத்தக்கூடாது என்ற உறுதிமொழியை வியாபாரிகள் வழங்கியதன் அடிப்படையில் வியாபாரத்திற்கான அனுமதிக்குரிய நடவடிக்கையை யாழ் மாநகர ஆணையாளரூடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் வியாபாரிகளது நிரந்தர வியாபாரத்திற்கான சூழ்நிலையை விரைவில் ஏற்படுத்தித்தருமாறு ஒருங்கிணைப்பாளரிடம் சம்பந்தப்பட்ட வியாபாரிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இவர்களது கோரிக்கையை விரைவில் நடைமுறைப்படுத்தி தருவதற்கு ஆணையாளரூடாக நடவடிக்கை எடுத்து தருவதாக ஒருங்கிணைப்பாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தச்சந்திப்பில் யாழ்.சாலை முகாமையாளர் குணபால செல்வம் மற்றும் தொழிலாளர் சங்க தலைவர் புவி ஆகியோருடன் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், நல்லூர் அமைப்பாளர் ரவீந்திரன் ஆகியோரும் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மக்களுடன் பிரதேசசபைகள் நெருக்கத்தினை வளர்க்க வேண்டும்




(கொழும்பு)

பிரதேசசபைகளுக்கும் மக்களுக்கும் இடையே நெருக்கத்தினை வளர்க்க வேண்டும் என மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதென்ற நோக்கத்தினை அடைவதற்கு இன்று நர்ங்கள் சரியான பாதையில் பயணித்துக்கொண்டுள்ளோம்.

சம்பந்தப்பட்ட அனைவரும் இணைந்து தீர்வினைக்காண்பதே எமது நோக்கமாகும். வெறுமனே சட்டரீதியான தீர்வைப்பெறுவதற்கு அப்பால் பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியான யதார்த்தமான தீர்வினைக்காண்பது தொடர்பில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

மக்களுக்கும் பிரதேசசபைளுக்கும் இடையே புரிந்துணர்வையும் தொடர்பினையும் ஏற்படுத்தி குறைபாடுகளை அறிந்து உதவும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பிரதேசசபைகளுக்கும் மக்களுக்கும் இடையிலான நெருக்கத்தினை வளர்க்க வேண் டும். அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

பிரதேசங்களில் அடையாளம் காணப்படும் பிரச்சினைகளையும் அவற்றினை அடையாளப்படுத்தி மேற்கொள்ளப்படும் திட்டமிடல் பணிகளுக்கும் உதவுவதற்கு நாங்கள் தயாராகவுள்ளோம் என்றார்.

## சிறுபான்மையினருக்கு நியாயமான தேர்தல் முறைமாற்றம் அவசியம்

### ரவூப்ஹக்கீம் கோரிக்கை

சிறுபான்மை மக்களுக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமை மாற்றத்தின் போது பெரும்பான்மை சமூகத்தைப் போன்றே சிறுபான்மை சமூகத்திற்கும் நியாயம் கிட்டும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

19ஆவது திருத்தச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருந்தால் அது ஓர் சுபமான விடயமாக கருதப்பட்டிருக்கும்.

எனினும், 19ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த விடாது எதிர்க்கட்சிகள் தடை ஏற்படுத்தி வருகின்றன.

திருத்தச் சட்டத்தை அமுல் படுத்த 27ஆம் திகதி வரையில் கால அவகாசம் கோரப்பட்டது.

கோல் அடிப்பதற்கு செல்லும் போது கோல் கம்பத்தை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வது போன்று எதிர்க்கட்சிகள் 19ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தை காலம் தாழ்த்தி வருகின்றன.

தேர்தல் முறைமை மாற்றத்தின் போது பிரதான இரண்டு கட்சிகளினதும் தேவைகள் மட்டும் கருத்திற்கொள்ளப்படக் கூடாது.

ஏனைய கட்சிகள் ஏனைய இன சமூகங்களினதும் கருத்துக்கள் கோரப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## சிலை அமைக்க நடவடிக்கை

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட தலைமையக பகுதியில் விரைவில் மறைந்த மாமனிதர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தற்கு சிலை அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை வடமகாண உள்ளூராட்சி அமைச்சரிடமிருந்து, வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகம் எதிர்பார்த்துள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட பிரதேச சபை வளவினுள் சிலை வைப்பதற்கான அனுமதியை கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் சபை அனுமதித்திருந்தது.

இதன் அடிப்படையிலேயே வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகம் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சரிடமிருந்து சிலை வைப்பதற்கான அனுமதியை எதிர்பார்த்துள்ளதாகத் தெரிய வருகிறது. (92)

## வீரகத்தி விநாயகர் ஆலய பொதுச்சபைக் கூட்டம்

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிர்வாக சபைத் தலைவர் கா.வேதநாயகம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கல்வயல் கிராம உத்தியோகத்தர் திருமதி எஸ்.உமாயோதினி உரை நிகழ்த்துவார்.

இதன்போது பொதுச்சபை அறிக்கை, பொருளாளர் அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்படுவதுடன் புதிய நிர்வாகத் தேர்வும் இடம் பெறவுள்ளது.

எனவே பரிபாலன சபை அங்கத்தவர்கள் அனவரும் அங்கத்துவப் பணத்தை செலுத்தி உறுப்புரிமையை புதுப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பொதுக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பரிபாலனசபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பதவியை பறிக்க முயற்சித்தால் நீதிமன்றத்தை நாட நேரிடும்

### மேல்மாகாண முதலமைச்சர் எச்சரிக்கை

மேல் மாகாணசபையில் அங்கம் வகித்து வரும் 20 உறுப்பினர்கள் எனக்கு எதிராக கையொப்பமிட்டால் பதவியைத் துறக்கத் தயார் சட்டவிரோதமான முறையில் தமது பதவியை பறிக்க முயற்சித்தால் நீதிமன்றின் உதவியை நாட நேரிடும் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பதவி விலக வேண்டுமென மாகாணசபையின் 56 உறுப்பினர்களில் 20 பேர் உத்தியோகபூர்வமாக கையொப்பமிட்டு எதிர்ப்பை வெளியிட்டாலும் பதவியை துறப்பேன்.

முதலமைச்சர் பதவியிலிருந்து என்னை வெளியேற்ற சில தரப்பினர் முயற்சிக்கின்றார்கள்.

எனினும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் எனக்கே ஆதரவளித்து வருகின்றார்கள் என்றார்.

52. கொடிவகை தாவரத்திற்கு உதாரண
(1). மிளகாய்  (2). ...ங்காய்  (3). கத்தரி

53. இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலை...கள்
(1). டி.பி.ஜயதிலக்க, அனாகரிக தர்மபால, வீரபுன்அப்பு
(2). டி.பி.ஜயதிலக்க, அனாகரிக, டி.பி.ஜாயா
(3). டி.பி.ஜயதிலக்க, ஆனந்தகுமாரசுவாமி, டி.பி.ஜாயா

54. 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற நாடு
(1). சீனா  (2). அமெரிக்கா  (3). அவுஸ்ரேலியா

55. வானவில்லில் இல்லாத நிறம் ஒன்று
(1). பச்சை  (2). சிவப்பு  (3). கறுப்பு

56. பத்தை உரோமன் முறையில் எழுதினால்
(1). X  (2). IX  (3). XI

57. காடுகளை அழிப்பதால்
(1). நிலம் வெப்பமடையும்  (2). மழை குறையும்  (3). மரங்கள் செழித்துவளரும்

(09). "எனது கிராமத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ளம்" என்ற தலைப்பின் கீழ் நான்கு வசனங்களுக்கு குறையாது 5 வரிகளுக்கு மேற்படாது எழுதுக

58. ..............................

59. ..............................

60. ..............................

61. ..............................

62. ..............................

## நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (01).1.கடற்காற்று | 2.மீனவர்கள் | 3.காற்றின் | 4.கிழக்கு | 5.அண்மை |
| 6.வானத்துப் பொருட்கள் | 7.மின்சக்தி | 8.உப்பு | 9.இறந்தகாலம் | |
| 10.தரைக்காற்று வீசுவதால் | 11.பாரை,முரல் | 12.இந்து | 13.நெடுந்தீவு, புங்குடுதீவு | |
| (02).14.மூத | 15.வெலாவ | (03).16.தையற்காரர் | 17.முடிதிருத்துபவர் | |
| 18.விறகுவெட்டி | 19.சலவைத்தொழிலாளி | (04).20.புல் | 21.தென்னை | 22.முலையூட்டி |
| 23.வினை | 24.குருதிச்சோகை | 25.குளிர்சாதனப்பெட்டி | 26.பாம்பு | (05).27.சரி |
| 28.சரி | 29.பிழை | 30.சரி | 31.சரி | 32.பிழை |
| 33.பிழை | (06).34.peacock | 35.postmen | (07).36.8cm | 37.1.01 |
| 38.20 | 39.1 | 40.7.40 | 41.200ml | 42.ரூபா 100 |
| 43.250g | 44.120 | 45.13km | (08).46.செங்கோணம் | |
| 47.அதிகளவு காற்று | 48.காலி | 49.யானை | 50.உப்பு | 51.வெளவால் |
| 52.மலையடிவாரத்தில் | 53.தும்பி | (09).54.1 | 55.2 | 56.2 |
| 57.3 | 58.3 | 59.3 | 60.2 | 61.1 |
| 62.1 | 63.2 | 64.3 | 65.1 | 66.1 |
| 67.3 | 68.1 | 69.3 | 70.2 | 71.1 |
| 72.3 | 73.2 | (10).74 - 77 வரை விரும்பிய வசனம் | | |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1மணி 15நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01). பின்வரும் பந்தியை வாசித்து (1) - (11) வரையான வினாக்களுக்கு விடை தருக**

கிரேக்கநாட்டின் தலைநகரான எதென்சில் ஆரம்பித்த ஒலிம்பிக் போட்டியானது உலகிலேயே மிகவும் பெரிய போட்டி நிகழ்ச்சியாகும். உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள விளையாட்டு வீரர்கள் ஒரே மைதானத்தில் போட்டியிடும் நிகழ்வாகும். உலகின் வல்லரசு நாடான அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளான இலங்கை, இந்தியா, சீனா போன்ற தெற்காசிய நாடுகளும் போட்டியிடுகின்றன எல்லா ஒலிம்பிக் நிகழ்ச்சிகளும் சம்பிரதாய பூர்வமாகவே ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. அதன் ஆரம்ப நிகழ்வுகளும் அவ்வாறே நடைபெறுகின்றன. நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இப்போட்டியானது இறுதியாக அவுஸ்ரேலியாவின் தலைநகரான சிட்னியில் இடம்பெற்றது.

1. ஒலிம்பிக் போட்டி ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்த நாடு எது? ..............................
2. முதன் முதலாக ஒலிம்பிக் பதக்கமொன்றைப் பெற்ற இலங்கை வீரர் யார்? ..............................
3. ஒலிம்பிக் போட்டியின் போது வழங்கப்படும் மூன்று பதக்கங்களும் எவை? ..............................
4. ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கை பெற்ற இரண்டாவது பதக்கம் எப்போட்டிக்காக பெறப்பட்டது? ..............................
5. இறுதியாக நடைபெற்ற ஒலிம்பிக்போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது? ..............................
6. இப் போட்டியில் பங்குபற்றிய ஆசிய நாடுகள் 2 தருக? ..............................
7. பின்வரும் சுருக்கக்குறியீட்டின் மூலம் காட்டப்படும் நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக
(1). USA ..............................  (2). UK ..............................
8. அபிவிருத்தி அடைந்த நாடுகள் இரண்டை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக ..............................
9. எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக
(1). உள்நாடு ..............................  (2). வெற்றி ..............................
10. ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக
(1). அபிவிருத்தி ..............................  (2). ஆரம்பம் ..............................
11. உலகில் உள்ள பின்வரும் இடங்கள் எந்த நாட்டில் உள்ளவை எனக் குறிப்பிடுக
(1). எவரஸ்ட் மலைத் தொடர் ..............................
(2). சகாரா பாலைநிலம் ..............................
(3). தாஜ்மஹால் ..............................

**(02). பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக**

12. எழுத்து ..............................  13. கால் விரல்கள் ..............................
14. நகம் ..............................  15. பச்சை நிறம் ..............................

**(03). பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக**

16. நீருக்கு நிறம், மணம், சுவை உண்டு (......)
17. முக்கோணத்திற்கு நான்கு கோணங்கள் உண்டு (......)
18. பாரதியார் ஒரு சிறந்த புலவராவார் (......)

19. மழை மூலம் கிடைக்கும் நீர் மீண்டும் மேகமாகின்றது (......)

20. ஊற்று நீர் தூய நீராகும் (......)

21. சிங்கராஜ வனம் இலங்கையில் உள்ள மிகப்பெரிய காடாகும் (......)

22. 1979ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தலைநகரம் கொழும்பு (......)

**(04). பின்வரும் குறியீடுகளை தரப்பட்ட வாக்கியங்களில் பொருத்தமான இடத்தில் இடுக**

! " . , ? ....... ( )

23. மு ப 10 30 க்கு பாடசாலை இடைவேளை ஆகும்

...........................................................................................

24. மகளே வீட்டு வேலைக்கு 20பேர் வருவார்கள் என அம்மா கூறினார்

...........................................................................................

25. இதோ பாருங்கள் இன்று பகல் உணவிற்கு கொஞ்சம் அரிசியே உள்ளது

...........................................................................................


26. ஐயோ எங்களுக்கு நேர்ந்த கதி என மக்கள் கூறினர்

...........................................................................................


27. தங்கை நீ தினமும் பூங்கன்றுகளுக்கு நீர் ஊற்று


...........................................................................................


**(05). கீழே ஐந்து படங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அவதானித்து பொருத்தமான விடைகளுடன் இணைக்க**

28.  1. school

29.  2. Hospital

30.  3. Railway station

31.  4. Bus stop

32.  5. Bend




**(06). "அ" பகுதிக்குப் பொருத்தமான விடைகளை "ஆ" பகுதியில் இருந்து தெரிக**

| "அ" | "ஆ" |
|---|---|
| 33. ஈருடகவாழி ஒன்று ............ | A - கருவாடு |
| 34. ஈரப்பற்று அகற்றப்பட்ட உணவுகள் ............ | B - 24 |
| 35. புரதம் அடங்கிய உணவுகள் ............ | C - சோயாமீற் |
| 36. ஒருநாளில் உள்ள மணித்தியாலங்கள் ........ | D - பருப்பு |
| 37. உப்பிடப்பட்ட உணவு வகை ........ | E - தவளை |

**(07). பின்வரும் வரைபைப் பயன்படுத்தி தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

பாடசாலை ஒன்றில் உள்ள தரம் ஐந்து மாணவர்கள் விடுமுறைக் காலங்களில் காலை உணவாக உட்கொண்ட உணவு வகைகளை படம் காட்டுகிறது




38. மாணவர்கள் உண்ட உணவு வகைகள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது? ..................

39. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உணவு வகைகளிலும் ஒரு போசனைப்பதார்த்தம் அடங்கியுள்ளது அது என்ன? ..................................................

40. இங்கு உள்ள தானிய உணவு வகைகள் மூன்று தருக?

(1)........................ (2)........................ (3)........................

41. அதிகளவு மாணவர்கள் உண்ட உணவு வகை எது? ..................................

42. 15 மாணவர்கள் உண்ட உணவு எது? ..................................

43. இங்கு குறிப்பிட்டுள்ள புரதம் அடங்கிய உணவு வகைகள் இரண்டைப் பெயரிடுக?

(1)........................ (2)........................

44. இங்கு குறிப்பிட்டுள்ள காபோவைதரேற்று அடங்கிய உணவுவகைகள் மூன்றைப் பெயரிடுக

(1)........................ (2)........................

45. இப்பாடசாலையில் தரம் ஐந்தில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..................

46. குறைந்தளவு உணவு வகையை உட்கொண்ட மாணவர்களை மொத்த மாணவர்களின் பின்னமாகத் தருக?

...........................................................................................

47. பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்களத்தில் எழுதுக

(1). இலைக்கஞ்சி ........................ (2). தேங்காய் ........................

**(08). 48 - 57 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக**

48. இலங்கையின் மிக உயரத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையம்

(1). அப்புத்தளை (2). ரதல்லை (3). பட்டிபொலை

49. விமானம் ஒன்றில் பயணம் செல்பவரிடம் இருக்க வேண்டிய ஆவணம் ஒன்று

(1). காப்புறுதிப்பத்திரம் (2). பயணச்சீட்டு (3). விமானச்சீட்டு

50. கிணற்றில் இருந்து நீரை எடுப்பதற்கு இலகுவான உபகரணம்

(1). கப்பி (2). சாய்தளம் (3). கயிறு

51. ஈருடகவாழி ஒன்று

(1). தேனீ

(2). பல்லி

(3). தவளை

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்த ஏற்பாடு

## யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கருத்தரங்கினை புகையிரதத் திணைக்களம் மற்றும் வடக்குமாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தவுள்ளதாக யாழ்.வணிகர் கழகத்தலைவர் என்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கினை எதிர்வரும் மே மாதம் முதல் 3 வாரங்களுக்கு பளை முதல் காங்கேசன்துறை வரையுள்ள பாடசாலைகளில் நடாத்த தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ். வணிகர் கழகம் முன்னெடுத்துள்ள விழிப்புணர்வுச் செயற்பாடு தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தல் அமைந்துள்ள வணிகர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. ஊடகவியலாளர் சந்திப்பில் கருததளித்த யாழ் வணிகர்கழகத்தின் தலைவர் என்.ஜெயசேகரம் மேலும் தெரிவிக்கையில்

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காரணமாக யாழ். மாவட்டத்தில் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியதோடு. இதனால் இறப்புக்களும் இடம்பெற்று வருகின்றன. நீண்ட காலமாக எமது பகுதியில் புகையிரத போக்குவரத்து காணப்படாததனால் அது தொடர்பிலான விழிப்புணர்வுகளும் மிகக் குறைவாக காணப்படுகின்றன.

ஆகவே புகையிரத விபத்துக்களை குறைக்கும் நோக்குடனேயே இவ்விழிப்புணர்வு நடவடிக்கையை பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இவ்விழிப்புணர்வு நடவடிக்கைக்கு பொலிஸாரினதும் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

தென்மராட்சிக் கல்விவலயத்தில் 3 பாடசாலைகளிலும் வலிகாமம் கல்வி வலயத்தில் 6 பாடசாலைகளிலும் யாழ். கல்வி வலயத்தில் 8 பாடசாலைகளிலும் புகையிரத விபத்துக்கள் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங் கினை நடாத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

# மேய்ச்சல் தரவைகளை உருவாக்குமாறு பிரதேச செயலரிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சல் தரவைகளை உருவாக்கித்தரும்படி கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், தென்னியங்குளம், பழைய முருகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களின் மக்கள் துணுக்காய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமங்களில் காலபோக மற்றும் சிறுபோக நெற்செய்கைகளில் விவசாயிகள் ஈடுபடுவதன் காரணமாக கால்நடைகளை பராமரிக்கக்கூடிய மேய்ச்சல் தரவைகள் இல்லாமையினால் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தமது வேண்டுகையில் தெரிவித்துள்ளனர். கிராமங்களில் நடைபெற்ற நெற்செய்கைக் கூட்டங்களிலும் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மேய்ச்சல் தரவைகளுக்கான காணிகளை இனங்காண்பதில் துணுக்காய் பிரதேச செயலகம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.(160)

# தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் மீன்பிடித்தோருக்கு அபராதம்

முல்லைத்தீவு, நாயாறு கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த 13 மீனவர்களில் 12 மீனவர்களுக்கு முல்லைத்தீவு நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.ஷம்சுதீன் தலா 8000 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

மீனவர்களுடன் கைதான 15 வயதுச் சிறுவனை எச்சரிக்கை செய்த நீதவான், தொழிலுக்குச் செல்லாமல் பாடசாலை செல்லுமாறு அறிவுறுத்தினார். முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.சுதாகரன் தலைமையில் நாயாறு கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை நடாத்திய சோதனை நடவடிக்கையின் போது, தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 1 சிறுவன் உட்பட 13 பேரைக் கைதுசெய்தனர்.

இவர்களிடமிருந்து, தங்கூசி, கூட்டு வலைகள் என்பன மீட்கப்பட்டதுடன் பிடிபட்ட மீன்களையும் பொலிஸார் கையகப்படுத்தினர்.

மேற்படி 13 பேரையும் மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது, மீனவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

மீனவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வலைகள் மற்றும் மீன்களை மீளக்கையளிக்குமாறு நீதவான் உத்தரவிட்டமைக்கமைய அவற்றை மீளக்கையளித்ததாக நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை



வவுனியா நகர்ப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் சுகாதார பிரிவினரால் திடீர் சோதனை கடந்த வியாழக்கிழமை மேற்கொள் ளப்பட்டது. சுகாதார மற்றும் உணவு மாதத்தை முன்னிட்டு வவுனியா பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட இத்திடீர் பரிசோதனையின்போது, பல வர்த்தக நிலையங்களில் பாவனைக்குதவாத பொருட்கள் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டதுடன் உணவுப் பொருட்கள் கையாளப்படும் விதம் தொடர்பிலும் சோதனை நடாத்தப்பட்டது.

இதேவேளை, நாளைய தினம் உணவு கையாளும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு நோய் தடுப்பு ஊசி ஏற்றும் செயற்பாடும் சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

# விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

2016 ஆம் கல்வியாண்டுக்கான யப்பான் அரசாங்கத்தின் (Monbukagakusho Mext) புலமைப பரிசில்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்லூரியின் இளமாணி மற்றும் பட்டப்பின்படிப்பு புலமைப் பரிசில்களுக்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விணணப்பப் படிவங்கள் கோரப்பட்டுள்ளன என உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 22 ஆம் திகதி மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவத்தை உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் இணையத்தளத்தில் WWW.mohe.gov.lk என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

# தந்தை செல்வாவின் நினைவு தினம் நாளை

தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு நாளும் அஞ்சலியும் நினைவுரையும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கின் அருகிலுள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்தில் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வாவின் நினைவு அறங்காவல் குழுத்தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலமையில் இவ் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முன்னதாக தந்தை செல்வாவின் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

வரவேற்புரையினை தந்தை செல்வாவின் நினைவு அறங்காவல் குழுச் செயலாளர் பேராசிரியர் ச.சத்தியசீலன் வழங்கவுள்ளார். அஞ்சலியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்தந்தை எஸ்.ஜெயபாலகுமார் அடிகளார், மௌலவி ஐ.மஹ்மூத் ஆகியோர் வழங்கவுள்ளதோடு சிறப்புரையினை கனடா சட்டத் தரணிகனக மனோகரன் வழங்க நினைவுப் பேருரையினை செந்தமிழ் சொல் லருவி லலீசன் வழங்கவுள்ளார.

நன்றியுரையினை தந்தை செல்வாவின் நினைவு அறங்காவல்குழு உறுப்பினர் ஜி.தங்கவேல் வழங்கவுள்ளார்.

தமிழ் தேசத்தின் தந்தையை நினைவுகூரும் இவ் அஞ்சலி நிக்ழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (48)



இந்து கலாசார திணைக்களமும் புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்திய காரைக்காலம்மையார் குருபூசையையும் பரிசளிப்பு விழாவையும் கிராம உத்தியோகத்தர் அரவிந்தராம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், விழாத் தலைவர் எஸ்.தியாகராஜா தலைமையுரையாற்றுவதையும் இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.ரீ.சர்மிலா பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

# கொடிய எபோலா தாக்கம்

## இதுவரை 10,800 பேர் உயிரிழப்பு




எபோலா நோய்க்கு இதுவரை 10,800 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு எபோலா நோய பரவியது. இந்நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. உலகுக்கே அச்சுறுத்தலாக உள்ள எபோலாவுக்கு இதுவரை 10,823 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 26,079 பேர் பாதிக்கப்பட்டனர். லைபீரியா, கினியா, சியரா லியோன் ஆகிய நாடுகளில் எபோலாவால் அதிகளவில் உயிரிழந்துள்ளனர். இந்நோயை கட்டுப்படுத்த இந்த 3 நாடுகளும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

எபோலாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எபோலாவால் உயிரிழந்தவர்களை புதைப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கை, கடுமையான விதிமுறைகள் போன்றவற்றால் எபோலா தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. கடந்த 19ஆம் திகதியன்று, கினியாவில் 22, சியராவில் 12 பேருக்கு எபோலா அறிகுறி இருப்பது தெரியவந்துள்ளது. லைபீரியாவில் எபோலாவால் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை. எபோலா கட்டுக்குள் வந்தாலும் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

உலகச் செய்திகள்

# பாகிஸ்தானில் விமானத் தாக்குதல் 20 தீவிரவாதிகள் உயிரிழப்பு




வடமேற்கு பாகிஸ்தானில் பழங்குடியினர் வசிக்கும் கைபர் ஏஜென்சி பகுதியில் இராணுவம் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் தீவிரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கையை அந்நாட்டு இராணுவத்தினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த வகையில், கைபர் ஏஜென்சியின் திராஹ் பள்ளத்தாக்கில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பகுதியில் விமானம் மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தொடர் தாக்குதலில், தீவிரவாதிகளின் மறைவிடங்கள், அவர்களின் ஆயுதங்கள் முற்றிலும் சேதமடைந்தன.

இந்த தாக்குதலில் 3 தற்கொலைப்படை தீவிரவாதி உட்பட 20 பேர் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.தாக்குதல் தொடர்வதால் தீவிரவாதிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு ஆயுத உற்பத்தியில் விதிமுறைகளை மீறும் வடகொரியா



அணு ஆயுதங்களை அதிகளவில் தயாரிக்க வடகொரியா திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே அணு ஆயுதங்களை தயாரித்து வைத்துள்ள வடகொரியா, தற்போது மிகப்பெரிய அழிவை உண்டாக்கும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இவ்வாறு அதிகளவில் அணு ஆயுதங்கள் தயாரிக்க சர்வதேச அளவில் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன.ஆனால் விதி முறைகளை மீறி வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களை தயாரித்து வருகிறது.

தற்போது சக்தி வாய்ந்த 20 அணு ஆயுதங்களை வைத்துள்ள வடகொரியா, மேலும் இதனை அதிகரிக்கும் வேலையில் தீவிரமாக இறங்கியுள்ளது.இந்நிலையில் வடகொரியாவின் இச்செயல் அண்டை நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்த உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.மேலும், விதிமுறைகளை மீறி அணு ஆயு தங்களை வடகொரியா தயாரிக்கக் கூடாது எனவும் சீனா எச்சரித்துள்ளது.

# ஐ.எஸ். தீவிரவாதிகளின் அட்டூழியம் ஈராக்கில் மக்கள் வெளியேற்றம்

ஈராக்கில் ஐ.எஸ் தீவிரவாதிகள் முன்னேறி வருவதால் 90,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அனபார்(Anbar) என்னும் மாகாணத்தை விட்டு வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ் தொடர்ந்து பல அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றது.

இந்நிலையில் ஈராக்கின் அன்பர்(Anbar) மாகாணம் நோக்கி ஐ.எஸ்-யின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், சுமார் 90 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து வெளியேறியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.



இதுகுறித்து ஐ.நா சபையின் மனிதாபிமான விவகாரங்கள் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது, அன்பர் மாகாணத்தை நோக்கி ஐ.எஸ் படைகள் வேகமாக முன்னேறி வருகின்றன.

சில நாட்களுக்கு முன்பு அந்த மாகாணத்தின் தலைநகரான ரமதி(Ramadi) மற்றும் சில கிராமங்கள் ஐ.எஸ் அமைப்பினரால் கைப்பற்றப்பட்டன. அதன் காரணமாக மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர். இதுவரை சுமார் 90 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் வெளியேறி இருக்கிறார்கள். தற்போது அவர்களுக்கு உணவு, நீர் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மக்கள் பலரும் வெளியேறி வருவதாலும், கடைகள் பலவும் மூடப்பட்டிருப்பதாலும், ரமதி நகரம் ஆள் நடமாட்டம் இன்றி காட்சியளிக்கிறது என கூறப்பட்டுள்ளது.

# பீகாரில் புயலுடன் மழை இதுவரை 44 பேர் பலி

பீகார் மாநிலத்தில் வடக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களில் நேற்று முன் தினம் பெய்த புயல் மழைக்கு 44 பேர் பலியாகியுள்ளனர். 100இற்கும் மேற்பட்டவர்கள் காயம்; அடைந்தனர். ஆயிரக்கணக்கான ஹெக்யேர் பரப்பளவில் பயிர்கள் நாசம் அடைந்தன. புயல் மழை சேதத்தை பார்வையிட உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கை பிரதமர் மோடி அனுப்பி வைத்துள்ளார். வடமாநிலங்களில் தற்போது பருவம் தவறி மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் நாசமாகி வருகின்றன.



இந்நிலையில் பீகார் மாநிலத்தில் நேற்று முன்தினம் திடீரென பலத்த காற்றுடன் மழை கொட்டியது. இதில் வடக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான வீடுகளின் சுவர்கள் இடிந்தன. கூரைகள் காற்றில் பறந்தன. மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்ந்தன. இடிபாடுகளில் சிக்கியும், மின்சாரம் தாக்கியும் இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளனர். 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். மீட்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. உயிர் பலி அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.



# விநாயகரின் அவதாரமாம் குவியும் மக்கள் கூட்டம்





இந்தியா ஜார்க்கண்ட் மாநிலத்தில் நான்கு கால்கள் மற்றும் நான்கு கைகளுடன் அதிசய ஆண் குழந்தை பிறந்துள்ளது.ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள சிறிய நகரமான டும்ரி-இஸ்ரியில் தம்பதியினர் ஒருவருக்கு; நர்ன்கு கால்கள் மற்றும் நான்கு கைகளுடன் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்து சில நாட்களே ஆன நிலையில், இக்குழந்தையை பார்ப்பதற்காக அம்மாநில மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.மேலும், இக்குழந்தையை விநாயகரின் அவதாரம் எனவும் கூறிவருகின்றனர்.

இந்த அதிசய குழந்தையை பார்க்க வந்தவர் 72 மைல் தொலைவிலிருந்து இந்த அவதார குழந்தையை பார்க்க வந்தேன்.எனது நண்பர் குழந்தையின் புகைப்படத்தை அனுப்பியபோது என்னால் நம்பமுடியவில்லை,

ஆனால், அந்த புகைப்படம் உண்மை என நண்பர் கூறியதால், குழந்தையை பார்க்க நேரில் வந்துள்ளேன் என்று கூறியுள்ளார். இதுகுறித்து மருத்துவர்கள் கூறியதாவது, கருவில் இருந்த இரட்டை குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டின் காரணமாக, இவ்வாறு நான்கு கைகளுடன் குழந்தை பிறந்துள்ளது என்று கூறியுள்ளனர்.

# பால்மாவின் விலை மேலும் குறையுமா?

குழந்தைகளுக்கான பால் மாவின் விலையை குறைப்பது தொடர்பில் ஆராய்ந்து அறிவிக் குமாறு அத்தியாவசிய பொருட் களின் விலைக் குறைப்பு தொடர பான குழு, நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்க ளின் விலைக் குறைப்பு தொடர் பான குழுவின் கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் கரு ஜய சூரிய தலைமையில் நேற்று ஒன்று கூடியது. இந்நிலையி லேயே குழந்தைகளுக்கான பால் மாவின் விலையைக் குறைப்பது குறித்து அரசாங்கம் அக்கறை செலுத்தியுள்ளது.

## தடையை...

தோட்டப் பொலிஸார் நீதிமன் றம் ஊடாகப் பெற்றுக் கொண்ட னர். எனினும் நீதிமன்ற உத்த ரவை மீறி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன, மேல்மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரண துங்க, மாகாண சபை உறுப்பி னர் உதய கம்மன்பில உள்ளிட்ட பலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

## மன்னிப்பு...

செயல் என்று குறிப்பிட்டுள்ள டளஸ் அழகப்பெரும, குறித்த தேசியக்கொடிகளை ஏந்தியிருந் தமை காரணமாக எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவர் களிடம் மன்னிப்பைக் கோருவ தாக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இந்த மன்னிப்பைக் கோரினார்.

## வாக்குறுதிகளை...

விடயங்களில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினை நகர சபையாக மாற்றுவதுடன், கரைச்சி கிழக்கு, கரைச்சி வடக்கு ஆகிய பகுதிகளை தனிப் பிரதேச சபைகளாக மாற்றுதல் உள்ளிட்ட 13 விடயங்களும்,

வீதி அமைப்பு என்ற விடயத்தில் பிரதான வீதிகளை நிரந்தர வீதிகளாக மாற்றுதல், வீதிகளுக்கு பெயர் சூட்டுதல், வீதிகளின் முக்கிய இடங்களில் தெருவிளக்குகள் பொருத்துதல் உள்ளிட்ட விடயங்களும் கல்வி நடவடிக்கைகள், பொழுதுபோக்கு, சுகாதாரம், கலாசாரம், நிதி உள்ளிட்ட தலைப்புகளில் 21 விடயங்களும் என 37 இற்கும் மேற்பட்ட விடயங்கள் மக்கள் நலன் சார்ந்து பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களாகவும், அவற்றை நிறைவேற்றுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எவையும் கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்படாமை குறித்து பிரதேச சபையின் உப தலைவர் வ.நகுலேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்களான சு.தயாபரன் மற்றும் குமாரகுலசிங்கம் ஆகியோரிடம் ஊடகவிய லாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போது, தேர்தல் காலத்தில் தேர்தலில் வெற்றிபெறும் வகையில் தயாரிக்கப்பட்ட விஞ்ஞாபனமே தவிர, அதில் சொல்லப்பட்ட விடயங்களை நிறை வேற்ற வேண்டிய தேவையில்லை. அவ்வாறு அதனை நிறைவேற்ற முடியாது எனவும் பதிலளித்துள்ளனர். (29)

## அரசு வழங்கிய...

உருவாகியது. குறிப்பாக இனப்பிரச்சினைக் கான பொறிமுறையொன்றை கூட தனது விஞ்ஞா பனத்தில் குறிப்பிடாமல் இருந்த மைத்திரிபால தலைமையிலான அணியை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நிபந்தனை இன்றி ஆதரித்து வெற்றிபெறச் செய்திருந்தது. ஜனவரி 8 ஆம் திகதியின் பின்னர் நல்லாட்சியை மையப்படுத்தி நடவடிக்கைகள் தேசிய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தரு ணத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களிடம் நேரடி யாக குறிப்பிட்டோம்.

முக்கியமாக வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோர் மாற்றப்பட்டு வடக்கு மக்க ளின் நன்மதிப்பை அரசாங்கம் பெற்றிருந்தபோதும் அதனைத் தொடர்ந்து அன்றாட வாழ்க்கையில் மக்கள் செயற்பாடுகளை நெருக்கடிகளின்றி முன்னெடுப்பதற்கான சில நடவடிக்கைகளை உடன் செயற்படுத்துமாறு நாம் கோரினோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக ரீதியாக தமிழ் அதிகாரிகளை நியமிக்கும் படியும், மாவட்ட அபிவிருத்திக்குழு தொடர்பா கவும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக் களங்களில் நியாயமான முறையில் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் இடமாற்றங்கள் அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தோம்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் இவ்விடயங் கள் தொடர்பாக நேரடியாகவும் எழுத்து மூலமா கவும் விரிவாக கூறப்பட்டபோதும் அவ்விடயங்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுப்பதாக வாக் குறுதி அளித்திருந்தனர். கடந்த 9 ஆம் திகதி பிரத மர், மற்றும் பொது நிர்வாக அமைச்சர், போக்கு வரத்துத் துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து இவ்விடயங்கள் தொடர்பாக மேலும் விரிவாக குறிப்பிட்டிருந்தோம்.

வடமாகாணத்துக்கு மட்டுமே இலங்கை போக்கு வரத்துசபை தலைவர் பதவி காணப்பட்ட நிலை யில் தற்போது வன்னி அமைச்சர் ஒருவரின் சுய நலத்திற்காக வடக்கு மாகாணம் இரண்டாக பிளவு படுத்தப்பட்டு அமைச்சருக்கு சார்பான ஒருவருக்கு பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்ச ருக்காக வடக்கு மாகாணம் இரண்டாக பிளவு படுத்தப்பட்டமை மிகவும் பாரதூரமான விடயமா கும். மேலும் வவுனியா இலங்கை போக்குவரத்து சபைக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவொ ருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம் செட்டிக்குளம் பிரதேச செயலகத் தில் உள்ள தமிழ் செயலாளரை மாற்றி தனக்கு சார்பான ஒருவரை நியமிப்பதற்காக அதே வன்னி அமைச்சர் ஒருவரின் துணையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதுமட்டுமன்றி நல் லாட்சியிலும் பதவி, இடமாற்றம் மற்றும் நியம னங்களின் பின்னணியில் சுயலாப அரசியலை மையப்படுத்திய செயற்பாடுகளே காணப்படுகின் றன. இதனை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களாக முதலமைச்சர் உட்பட நாடாளு மன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்ட குழு வொன்று அமைக்கப்படவேண்டும் என்று தொடர்ச் சியாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் இன்று வரையில் பாராமுகமே காணப்படுகின்றது.

தற்போது 19 ஆவது திருத்தச்சட்ட மூலத்தைத் தொடர்ந்து 20 ஆவது திருத்தமாக தேர்தல் சீர் திருத்தத்தையும் மேற்கொள்வதற்கு பெரும்பான் மையின இரு பிரதான கட்சிகளும் முனைப்பாக உள்ளன.

குறிப்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனத்தின் துணையால் ஆட்சி மாற் றம் இடம்பெற்றது என்பதை ஜீரணிக்க முடியாத பெரும்பான்மை சக்திகள் எதிர்காலத்தில் அவ்வா றானதொரு நிலைமை ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர்.

ஆகவே அதற்காகவே சிறுபான்மை பிரதிநிதித் துவங்களில் குறைப்பை ஏற்படுத்தும் வகையிலான தேர்தல் முறைமை மாற்றத்தை முன்மொழிந் துள்ளனர்.

இதனை ஒருபோதும் அனுமதிக்ககூடாது. குறிப் பாக வடக்கு, கிழக்கு, மலையகம் வாழ் தமிழ் மொழி பேசும் மக்களின் பிரதிநிதித்துவங்கள் பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (160)

## ஊழலுக்கு...

பின்னர்கள் கூச்சல் இட்டார்கள் என்பதற்காக இதனை நிறுத்தப் போவதில்லை.

அசுத்தமானவர்கள் வெள்ளை நிற கால் மிதிப்புக்களை மிதித்தால் அது அசுத்தமாகும். தவறிழைத்தவர்களை சுத்தப்படுத்த வேண்டியதே எங்களது பொறுப்பு.

இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால, சிறிசேன, தாம் மற்றும் அமைச்சரவை ஆகியோர் இணைந்து சகலவற்றையும் சுத்தப்படுத்தியே இந்த செயற்பாட்டை நிறைவு செய்வோம் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## பாலியல்....

ஆச்சிரம்ம் அமைத்து செயற்பட்டு வந்தவரான இலங் கையைச் சேர்ந்த சுவாமி பிரேமானந்தா என்பவரும் அவரது சகாக்களான மூவரும் (கமலானந்தா, பாலன் எனப்படும் பாலேந்திரன், சதீஷ் எனப்படும் சதீஷ்குமார்), சிறுமியர் உட்பட 13 பெண்களை பாலியல் பாலாத்காரம் செய்தனர் என்றும் ஆச்சிரமவாசி ஒருவரை திட்டமிட்டுக் கொலை செய்து புதைத்தனர் என்றும் குற்றம் சுமத் தப்பட்டு நீதிமன்றத்தினால் விசாரிக்கப்பட்டு, இரட்டை ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

இவர்களது மேன்முறையீடுகளை விசாரணை செய்த இந்திய உச்சநீதிமன்றம் மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்ததுடன் இரட்டை ஆயுள்தண்டனையை உறுதி செய் தது.

மேற்படி சுவாமி பிரேமானந்தாவின் பாலியல் லீலை கள் குறித்து 90களில் தமிழக ஊடகங்களில், சினிமா உட்பட அனைத்திலும் கதை, கதையாகப் பேசப்பட்டது. அந்த சுவாமியே நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் குரு என்றும் கூறப்படுகிறது.

கூட்டங்களின்போது வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ் வரன் "குருப்பிரம்மனே...!" என்று தனது உரைகளின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுத் தியானிப்பது இந்த குரு வையே என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சுவாமியின் ஆச்சிரம செயற்பாடுகளில் நீதியர சர் விக்னேஸ்வரன் அதீத ஈடுபாடு காட்டி வருபவர். இரட்டை ஆயுள் தண்டனையை அனுபவித்த சுவாமி பிரேமானந்தா கூடலூர் சிறையில் நோய்வாய்ப்பட்டு 2011 இல் உயிரிழந்தார்.

அதுவரை அடிக்கடி சிறைக்குச் சென்று அவரைத் தரிசித்து வந்தார் நீதியரசர் விக்னேஸ்வரன். சுவாமியோடு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய மூவரும் தொடர்ந்து சிறையில் உள்ளனர். இந்த மூவரையும் விடுவிக்கும்படி கோரியே இப்போது இந்தியப் பிரதம ருக்கு கடிதம் எழுதியிருக்கின்றார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

இலங்கையின் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் குறித்து இந்திய அதிகாரிகள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர் என்று புதுடில்லி ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன. மேற்படி மூவரும் இந்த வழக்கில் குற்றங்களில் தவறாக சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளனர்.

அவர்கள் மூவருமே குற்றமற்ற அப்பாவிகள். திருச்சி பிரேமானந்தா ஆச்சிரமமும் அதன் சொத்துக்களும் சரியாகப் பரிபாலிக்கப்படவேண்டும். ஆகவே இந்த மூவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று விக் னேஸ்வரன் கோரியிருக்கின்றமை குறித்தே இந்திய அதிகாரிகள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் வெளியிட்டி ருக்கின்றனர்.

நீதித் துறையின் உயர் சேவையில் இருந்த நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு இந்திய நீதித்துறையின் முறைமை குறித்து நன்கு தெரியும். கீழ் நீதிமன்றத்தினால் குற்ற வாளிகளாகக் காணப்பட்டு மேல் நீதிமன்றத்தினால் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தகைய விடயத்தில் குற்றவாளிகள் தவறான முறையில் இந்த வழக்கில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் அப்பாவிகள் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிடுவது இந்திய நீதித்துறையையே கேலிக்குள் ளாக்குவது போன்றது என்று அந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையிலிருந்து 1983 கலவரங்களை அடுத்து இடம்பெயர்ந்த சுவாமி பிரேமானந்தா திருச்சி அருகே பாத்திமா நகரில் சுவாமி பிரேமானந்தா ஆச்சிரமத்தை ஆரம்பித்தார். இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்த பெண்கள் பலர் ஆச்சிரமத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த னர்.

90 களின் முற்பகுதிகளில் ஆச்சிரமத்தில் தங்கியிருந்த ஒரு பெண் அங்கிருந்து தப்பியமையை அடுத்து பல திடுக்கிடும் அந்தரங்கங்கள் அம்பலமாகின. கைதுசெய் யப்பட்ட சுவாமி பிரேமானந்தா மீது 1994 இல் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஆச்சிரமத்தில் தங்கியிருந்த ஈழத்தமிழ்யுவதிகள் 13 பேரை பாலியல் பலாத்காரம் செய்தமை உட்பட பல விடயங்கள் அடுக்கடுக்காக முன்வைக்கப்பட்டன.

இந்த அத்துமீறல்களை எதிர்த்தவர் என்று கூறப்படும் ஆச்சிரமவாசியான ரவி என்பவரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. அவரை திட்டமிட்டுக் கொலை செய்தார் என்றும் சுவாமி பிரேமானந்தா மீது குற்றம் சுமத்தப் பட்டது.

சுவாமி பிரேமானந்தாவினால் பாலியல் பலாத்கா ரத்துக்கு உட்படுத்தப்பட்டவர் என்று கூறப்படும் ஒரு யுவதி கருவுற்றிருந்த நிலையில் மரபணுச் சோதனை மூலம் அந்த கருவுக்கு சுவாமி பிரேமானந்தாவே கார ணம் என்பதும் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. இக்கொடூரங்களுக்கு உதவி, ஒத்துழைத்தனர் என்ற அடிப்படையில் ஏனைய மூவருக்கும் சுவாமி பிரேமானந் தாவுடன் சேர்த்து 1997 ஆகஸ்ட் 21 ஆம் திகதி இரட்டை ஆயுள்தண்டளை பட்டுக்கோட்டை நீதிமன்றினால் விதிக் கப்பட்டது.

சிறைவிதிக்கப்பட்ட கமலானந்தாவின் மனைவியான டாக்டர் சந்திரதேவிக்கு இந்தப் பாலியல் கொடூரங்க ளுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் கருக்களை சட்ட விரோதமாகக் கலைத்த குற்றத்துக்காக 39 மாத சிறை வாசமும் 30ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் சிறைவாசம் முடித்து தற்போது வெளியே வந்துள்ளார்.

சுவாமி பிரேமானந்தாவுக்கு இரட்டை ஆயுள் சிறைத் தண்டனையுடன் 66 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா அபராத மும் விதிக்கப்பட்டது. சுவாமி பிரேமானந்தா சிறையி லேயே மரணமானார். ஏனைய மூவரும் தங்களது 40 ஆண்டு கால சிறைவாசத்தில் 16 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

அவர்களை விடுவிக்கும்படியே வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இப்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை கடிதம் மூலம் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றார். இந்த விவகாரம் குறித்து பிரபல புதுடில்லி ஊடகம் ஒன்று மின்னஞ்சல் மூலம் முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் விளக்கம் கேட்டதாகவும் அதற்கு பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

பிந்திய தகவல்களின் படி பிரேமானந்தா ஆச்சிரம வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு இந்தியப் பிரதமரிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுக்கவில்லை என்று வடக்கு மாகாணசபை வட்டா ரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ரைம்ஸ் ஒவ் இந்தியா நாளிதழில், வெளியானது போல, இந்திய நீதித்துறையில் தலையீடு செய்யும் வகையில், வடக்கு மாகாண முதலமைச்சர் கடிதம் எழுதவில்லை என்றும், தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சரின் மீது வீண்பழி சுமத்தும் வகையில் ரைம்ஸ் ஒவ் இந்தியா விசமத்தனமாக செய்தி வெளியிட் டுள்ளதாக வடக்கு மாகாணசபை வட்டாரங்கள் குறிப் பிட்டுள்ளன.

இந்த வழக்கில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பட்ட, கமலானந்தாவின் மகன் சிவதி, கடிதம் மூலமும் மின்னஞ்சல் மூலமும், இந்தியப் பிரதமருக்கு அனுப்புவ தற்கான கடிதம் ஒன்றை வடக்கு மாகாண முதலமைச் சருக்கு அனுப்பியிருந்தார்.

அதில், கமலானந்தாவின் மனைவி, மற்றும் ஒற்றை ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர்களான, பாலன் எனப் படும் பாலேந்திராவின் சகோதரர், சதீஸ் எனப்படும் சதீஸ்குமார் என்பவரின் தாயார், நந்தா எனப்படும் நந்தகுமாரின் மனைவி ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

அந்தக் கடித்ததை, அனுப்பிய சிவதி மற்றும் அவரது தாயார் ஆகியோர், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில், குறிப்பிட்ட கடிதத்தை, தங்களின் கவனத்துக்கு அனுப்பி வைப்பதாக, வட்க்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பு ஒன்றை மட்டுமே எழுதியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய அரசின் 100 நாள் அறுவடை

# நம்பிக்கை வைக்க எதுவுமில்லை



புதிய அரசின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் கடந்த அரசினால் பழிவாங்கப்பட்டவர்கள் எனக் கருதப்பட்டவர்களுக்கு திருப்திகரமான தீர்வுகள் கொடுத்ததே அன்றி, சிறுபான்மையின மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

100 நாட்கள் வேலைத் திட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், 100 நாட்கள் வேலைத் திட்டத்தில் காணி கையளிப்பு எனும் கபட நாடகம் இடம்பெற்றது. அது மக்களுக்கு திருப்திகரமானதாக இருக்கவில்லை. அத்துடன், கிழக்கு மாகாணத்தில் உள்ள காணிகள் பற்றி எந்தவிடயமும் பேசப்படவுமில்லை.

சிறையில் இருப்பவர்களை இரண்டு கிழமைகளில் விடுவிப்பதாகக்கூறியிருந்தனர். அத்துடன், காணாமல்போனவர்கள் தொடர்பாக குறைந்தபட்சம் விசாரணைகள் கூட இடம்பெறவில்லை.

100 நாட்கள் திட்டத்திற்குள் அரசியல் தீர்வை நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால், வடக்கு கிழக்கு மக்களின் நாளாந்த விடயத்தில் திருப்திகரமான செயற்பாடு ஏற்படுவதாகக்கூறி மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு புதிய அரசின் மூலம் விடிவு வரும் என நம்பிக்கை தெரிவித்து மக்களுக்கு உறுதியளித்திருந்தனர்.

அந்தவகையில் ஏமாற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொறுப்புக்கூற வேண்டும். நிறைவேற்று அதிகார சபையில் இருந்தும் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பெற்றுக் கொடுக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (29)

## ஹோலி அதிரடி; வென்றது பெங்களூர்

(அஹமதாபாத்)

ஹோலி, வில்லியர்ஸ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

எட்டாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 22ஆவது லீக் ஆட்டம் நேற்று இரவு அஹ்மதாபாத்தில் நடைபெற்றது. இதில் ராஜஸ்தான் அணியும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வட்சன் 26, ஸ்ரீபன் ஸ்மித் 31, பின்னி 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைக்கல் ஸ்ரார்க் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பெங்களூர் அணி ஹோலி, டிவில்லியர்ஸ் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது. இறுதியில் பெங்களூர் அணி 16.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஹோலி 62, டிவில்லியர்ஸ் 47 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் கிறிஸ்கெய்ல் 20 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரார்க் தெரிவானார். இதன் மூலம் பெங்களூர் அணி இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

# எல்லாமே அரசியல் பழிவாங்கல்தான்



(கொழும்பு)

முற்று முழுதாக அரசியல் பழிவாங்கலுக்காக பொய்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவரும் முன்னாள் பொருளாதார அமைச்சரும் தனது இளைய சகோதரருமான பசில் ராஜபக்ஷவை நேற்று நேரில் சென்று பார்த்து நலம் விசாரித்த பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

தனக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாகவும் நாட்டில் உள்ள சூழ்நிலையை அடுத்து சந்திப்பு தள்ளிப்போயுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றி அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்பதையே தானும் கோரியதாகவும் அதனால் 19ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாக வாக்களிக்கும் என்றும் கட்சியின் தீர்மானத்தின்படி உறுப்பினர்கள் செயற்படுவர் என்றும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

தேர்தல் முறை குறித்து தனக்கு தனிப்பட்ட கருத்துக்கள் உள்ளதாகவும் ஆனால் கட்சியின் தீர்மானமே இறுதியாகும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்தின்படியே பசில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இது முழுமையான அரசியல் பழிவாங்குதல் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பசில் ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, யோசித்த ராஜபக்ஷ என அனைவர் மீதும் வெவ்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் நாம் அதனை நீதிமன்றில் பார்த்துக் கொள்வோம். ஆனால் ராஜபக்ஷவினர் திருடர்கள் அல்ல என்று மஹிந்த கூறினார்.

எதிர்வரும் மே தினக் கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தொழிற்சங்கங்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் இருந்து அழைப்பு வந்துள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## மகிந்தவுக்கு எதிராக மேலுமொரு முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மற்றுமொரு முறைப்பாடு இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவில் நேற்று வெள்ளிக்கிழமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் ஹெல்பிங் ஹேண்ட் என்ற தொனிப்பொருளில் உதவித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த உதவித் திட்டத்தினால் சேர்க்கப்பட்ட 8 ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி மஹிந்த ஞாபகார்த்த நிலையத்திற்கு வழங்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையிலேயே பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று பகல் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் இது தொடர்பில் முறையிட்டுள்ளார். ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக ஏற்கனவே பல முறைப்பாடுகள் குறித்த ஆணைக்குழுவில் பதிவாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் ஜே.வி.பி. போராட்டம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலத்தினை நிறைவேற்றக்கோரி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பி. யினால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.



ஜனாதிபதி மைத்திரிபால மற்றும், பிரதமர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் அரசிற்கு எதிராக போராடவும் ஜே.வி.பி. தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி முறைமையினை நீக்கி அதிகாரப் பரவலாக்கம் மற்றும் 19ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றுவதில் இழுபறி நிலைமை எழுந்துள்ள நிலையில்,

எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் 19ஆவது திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

## முதலில் 19ஆவது திருத்தம் பின்னரே நாடாளுமன்றம் கலைப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னரே நாடாளுமன்றத்தை கலைக்கவேண்டுமென சமூகநீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபிததேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நாங்கள் எந்தக் கட்சியையும் ஆட்சிக்குகொண்டுவர விரும்பவில்லை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவே விரும்புகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் வீதியில் இறங்கி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதற்கு ஆதரவளிக்குமாறு வலியுறுத்தவேண்டும்

இதுவே இறுதி சந்தர்ப்பம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## தென்மராட்சியில் மினி சூறாவளி



தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரு மணி நேரம் சுழல்காற்றுடன் பெய்த கடும்மழை மற்றும் இடிமின்னல் தாக்கத்தினால் பல இடங்களில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணி தொடக்கம் 3.30மணி வரை தொடர்ச்சியாக கண்ணைப் பறிக்கும் பயங்கர இடி மின்னலுடன் பெருமழை பெய்தது. இந்தவேளை, சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் ஏற்பட்ட திடீர் சுழல்காற்றினால் இரு கட்டடங்களின் கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள தோட்டவெளியில் உருவான சுழல் காற்று அங்குள்ள அரைக்கும் ஆலையின் கூரைத் தகடுகளையும் அருகில் இருந்த வீட்டுக் கூரைத் தகடுகளையும் பிடுங்கி எறிந்தன. இதேவேளை, மின்னல் தாக்கியதில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மின் இணைப்புகள் முற்றாக எரிந்துள்ளன. பாடசாலை முடிந்து மாணவர்கள் அனைவரும் வீடு சென்றதால் பாதிப்பு ஏற்படவில்லை.

## தீ விபத்தினால் வீடு எரிந்து நாசம்

(கரணவாய்)

துன்னாலை தெற்கு கிளான் என்ற கிராமத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இக்கிராமத்தைச் சேர்ந்த பி. தில்லைநாதன் என்பவரின் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாகவே அந்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று மாலை 5.30 மணிக்கு ஏற்பட்ட இந்த தீயை அணைக்க பல தரப்பினரும் முயற்சித்தும் அது பயனளிக்கவில்லை. (18)

## மாதாந்த ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, இந்தக் கலந்துரையாடலில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்க செயலாளர் ந. கனகலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.